தலத் திருச்சபையில் பங்கேற்பு அமைப்புக்கள்

தயாரிப்பு & வெளியீடு

தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு
திருச்சிராப்பள்ளி - 620 012.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

தலத் திருச்சபையில் பங்கேற்பு அமைப்புக்கள்

- மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவை
- பங்கு மேய்ப்புப் பணிப் பேரவை
- பங்கு நிதிக்குழு

மாதிரி விதிமுறைகள் கையேடு

தயாரிப்பு & வெளியீடு

தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு,
அஞ்சல் பெட்டி எண் 1086,
57, கான்வென்ட் ரோடு, தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 012.

நூல்	:	தலத் திருச்சபையில் பங்கேற்பு அமைப்புக்கள்
பதிப்பு	:	முதல் பதிப்பு
ஆண்டு	:	நவம்பர், 1995
உரிமை ©	:	தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு திருச்சிராப்பள்ளி
பக்கம்	:	56
விலை	:	ரூபாய் நான்கு
அச்சு	:	சுசின் டெஸ்க்டாப் கிராஃபிக்ஸ் திருச்சி – 1 ✆ 462177
தயாரிப்பு & வெளியீடு	:	தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு. திருச்சிராப்பள்ளி
கிடைக்குமிடம்	:	1. தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு அஞ்சல் பெட்டி எண் 1000 57, கான்வென்ட் ரோடு கிராப்பட்டி, திருச்சிராப்பள்ளி – 620 012. 2. மறைமாவட்டப் பொதுநிலையினர் பணிக்குழுக்கள் 3. மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்

முன்னுரை

தமிழக ஆயர் பேரவையின் பொதுநிலையினர் பணிக் குழுவின் முயற்சியால் மறைமாவட்ட மேய்ப்புப்பணிக் குழு, பங்கு மேய்ப்புப் பணிக் குழு, பங்கு நிதிக் குழு ஆகியவற்றுக்கான பொது விதிமுறைகள் தயாரிக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். இவற்றை மாதிரி விதிமுறைகளாக வெளியிடுமாறு தமிழக ஆயர்கள் பரிந்துரைத்துள்ளனர். ஆகவே இவ்விதிமுறைகளை நூல் வடிவமாக்கி உங்கள் கைகளில் தவழ விடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் விரும்புவதுபோல, பொது நிலையினரின் பங்கேற்பு திருச்சபையின் வாழ்விலும் வளர்ச்சியிலும் அதிகரிக்க இந்நூல் பெரிதும் உதவும் என்பது என் உறுதியான நம்பிக்கை. பங்கு அளவிலும் மறைமாவட்ட அளவிலும் பல பொதுநிலையினர் பொறுப்புடனும் ஈடுபாட்டுடனும் உழைத்திட முன்வருவதற்கு இவை சிறந்த வழிகாட்டியாக அமையுமென எதிர்பார்க்கிறேன். தமிழகத்தில் பொது நிலையினரும் குருக்களும் ஒருங்கிணைந்து செயல்படுவது காலத்தின் கட்டாயமாகும். ஏனெனில் கிறிஸ்துவ மதிப்பீடுகளை மையமாக வைத்து, நற்செய்தியைப் பிறர் அறிந்து கொள்ள உதவுவது ஒவ்வொரு கிறிஸ்துவருக்கும் உரிய கடமை. இது குருகுலத்தாருக்கும் துறவறத்தார்க்கும் மட்டுமன்று, எல்லாக் கத்தோலிக்கருக்கும் உரிய பொதுக் கடமை.

இக்கடமையைச் சிறப்பாக நிறைவேற்றும் வகையில் குருக்களும் துறவியரும் பொதுநிலையினரும், பங்கு அளவிலும் மறைமாவட்ட அளவிலும் ஒத்துழைத்து, திருச்சபையின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உதவ வாழ்த்துகிறேன்.

இவ்விதிமுறைகளை உருவாக்க உதவிய பொது நிலையினர் பணிக்குழு உறுப்பினர்களுக்கும், பிற நண்பர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றி.

+ பீட்டர் ரெமிஜியுஸ்

21. 10. 1995
கும்பகோணம்

குடந்தை ஆயர் & தலைவர்,
தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு.

உள்ளடக்கம்

முன்னுரை

முகவுரை

1. [illegible] 5

2. [illegible] 19

3. [illegible] 41

முகவுரை

நாம் வாழுகின்ற இந்த உலகில் இறையரசு மலர இவ்வுலகு புதுப்பிக்கப்பட வேண்டும். இந்நிலையில் திருச்சபையும் காலத்தின் அறிகுறிகளைக் கண்டு கொண்டு, தன்னையே புதுப்பித்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. கடவுள் காலத்தைக் கடந்தவர் என்பதால் கடந்த காலத்தில் மக்களிடையே அவர் செயல்பட்டதில் வெளிப்பட்ட நல்ல மரபுகளையும், நமது பயணத்தில் இன்றும் அவர் நம்மோடு கூட இருந்து செயல்படுகின்ற நிகழ்கால உண்மைகளையும், இலக்கை நோக்கிப் பயணம் செய்யும் நமக்கு அவர் அளித்துள்ள வருங்கால எதிர்பார்ப்புகளையும் கருத்தில் கொண்டு இப்புதுப்பித்தல் பணி செயல்பட வேண்டும். இதற்கு நல்லவற்றில் வேரூன்றி, தீயவற்றை அகற்றும் திறனைப் பெறுவது தேவையாகிறது.

இன்று இல்லத் திருச்சபையும், தலத் திருச்சபையும், உலகத் திருச்சபையும் செயல்படும் நிலை கண்டு நம்மில் சிலர் அதிருப்தி அடையலாம். இந்நிலை மாறிச் சிறப்பாகச் செயல்பட வேண்டுமெனில் அதற்கு நமது மனநிலையிலும், அணுகுமுறையிலும் சில மாற்றங்கள் தேவை:

அ. கடவுள், மனிதன், உலகம், திருச்சபை என்னும் உண்மைகளைப் பற்றிய தெளிவான, முழுமையான, விரிவான பார்வை நம் அனைவருக்கும் தேவைப்படுகின்றது.

ஆ. இந்தப் பின்னணியில் உயிரோட்டமுள்ள, இறையரசின் மதிப்பீடுகள் நமது மனதில் உறுதிப்பாடுகளாக, அசைக்க முடியாத முடிவுகளாக நிலைபெற வேண்டும்.

இ. இத்தகைய பார்வையும், மதிப்பீடுகளும் சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டு அதற்குத் தேவையான, நீதியான, பொருத்தமான அமைப்புக்கள் ஏற்படுத்தப்படும்பொழுது தான், அவற்றிற்கு ஓர் அர்த்தத்தை நாம் காண முடியும்.

இத்தகைய தெளிவும் தீர்க்கமான சிந்தனையும் திருச்சபையின் உறுப்பினர்களான பொது நிலையினர், துறவியர், திரு ஆட்சியாளர்கள் நடுவில் வந்து விட்டால் உண்மையாகவே இறையரசின் அருட்சாதனமாகத் திருச்சபை விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இல்லத் திருச்சபையாக ஆரம்பித்து, அரசத் திருச்சபையாக வடிவெடுத்து, ஆட்சித் திருச்சபையாக வளர்ந்து வந்துள்ள நமது திருச்சபை இன்று கிறிஸ்து கூறியதுபோல் ஓர் அன்புச் சமூகமாக வாழ முயல்கிறது. தன்னை ஒரு நிறுவனமாக மட்டும் காணாமல், இறையரசு இயக்கமாகக் காண்கின்ற நிலை இன்று வந்துள்ளது. இறைவனையும், அவரது

திருவுள்ளத்தையும் திட்டத்தையும் மையமாகக் கொண்டு, விளங்கும் அருட்சாதனமாகத் திகழ அது முயற்சி செய்கின்றது.

இப்பின்னணியில் தான், திருத்தந்தை முதல் பொதுநிலையினர் வரை அனைவரும் இணைந்து திருச்சபையின் போதனைகளைச் செயல்படுத்த அழைக்கப்படுகின்றனர். இதன் அடிப்படையில்தான் நாம் "ஆலோசனை", "கூட்டுப் பொறுப்பு" என்பவற்றைச் சரியாக புரிந்து கொள்ள முடியும். "திருச்சபை ஓர் உறவுச் சமூகமாக விளங்குகின்ற காரணத்தினால் அதன் எல்லா மட்டங்களிலும் பங்கேற்பும், கூட்டுப் பொறுப்பும் இருக்க வேண்டும்" என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் முடிந்த இருபதாம் ஆண்டு அறிக்கை நமக்கு இன்று வலியுறுத்துகிறது. எனவே திருச்சபையின் செயல்பாட்டை மூன்று நிலைகளில் காணலாம்:

அ. திருத்தந்தை முதல் பொதுநிலையினர்வரை, ஒவ்வொருவரும் தன்னை முழுமையாக உணர்ந்து, தன்னில் இருக்கும் இறைவனோடும், தன் அயலானோடும் இணைந்து சிந்தித்துச் செயல்படும்பொழுது "தனி நபராக" இருந்தாலும், திருச்சபையாகச் செயல்பட முடியும்.

ஆ. இருவர் மூவர் அவர் பெயரால் இணைந்து "திருச்சபையாக"ச் செயல்பட முடியும்.

இ. 'திருச்சபை இருப்பது உலகுக்காக' என்னும் எண்ணத்துடன், இறையரசின் மதிப்பீடுகளுடன் உலகில் "திருச்சபையாக"ச் செயல்பட முடியும்.

இத்தகைய இறைப்பணியில் இறைவன் தந்த ஆவியை அணைத்திடாது, இணைந்து செயல்படுவது மிகவும் முக்கியமாகிறது. திருச்சபையைக் கட்டி எழுப்பும் பணியில் கிறிஸ்துவ விசுவாசிகள் அனைவருக்கும் சமமான பங்கு உண்டு. இதை இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் இவ்வாறு கூறுகிறது: "கிறிஸ்துவில் அடைந்த மறு பிறப்பினால் பிறக்கும் மாண்பு அதன் உறுப்பினர் யாவருக்கும் பொதுவானதே. பிள்ளைகளுக்குரிய அருளும், நிறைவாழ்வை அடைய அவர்கள் பெற்றிருக்கும் அழைப்பும் பொதுவானவையே: மீட்பும் நம்பிக்கையும் பிளவுபடா இறையன்பும் அனைவருக்கும் ஒன்றே. எனவே, கிறிஸ்துவிலும் திருச்சபையிலும் குலம், நாடு, சமூக நிலைமை, பால் என்பனவற்றின் அடிப்படையில் எவ்வித ஏற்றத் தாழ்வுமில்லை". (திருச்சபை 32)

திருச்சபைச் சட்டமும் இதையே வலியுறுத்துகிறது. "கிறிஸ்துவில் மறுபிறப்பு அடைந்ததன் விளைவாகக் கிறிஸ்துவ விசுவாசிகள் எல்லோருடைய மத்தியிலும் அவர்களது மேன்மைநிலை, செயல்பாடுகள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் உண்மையான சமத்துவம் நிலவுகிறது. இந்தச் சமத்துவத்தின் காரணமாக அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் நிலைக்கும் பணிப்பொறுப்புக்கும் ஏற்ற விதத்தில் கிறிஸ்துவின் உடலைக்

கட்டி எழுப்பத் துணை செய்கின்றனர்" (திருச்சபைச் சட்டத்தொகுப்பு, 208). இன்று திருச்சபையில் பல்வேறு அமைப்புக்கள் உள்ளன. அவற்றில் தலத் திருச்சபையின் தொடர்பணிக்குத் தேவையான, பின்வரும் அமைப்புகட்கு முன்னுரிமை கொடுத்துத் துரிதமாகச் செயல்பட அனைவரும் முனைய வேண்டும். தலத் திருச்சபைகட்குப் பங்கு மேய்ப்புப் பணிப் பேரவையும், பங்கு நிதிக்குழுவும், மறைமாவட்ட மேய்ப்புப்பணிப் பேரவையும் இன்றியமையாத தேவையாகின்றன. இவ்வமைப்புக்களை ஏற்படுத்துவதில் இனியும் காலம் தாழ்த்துதல் நன்றன்று.

மக்கள் நடுவில் போதிய தெளிவின்மையும், பழமைப் பிடிப்பும், போதிய பயிற்சி இன்மையும், வழிநடத்துவோர் தம் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் முழுமையாகப் பகிர்ந்து கொடுக்காத நிலையும் இவ்வமைப்புக்களை முறையாகவும் சரியாகவும் ஏற்படுத்தி நடத்த முடியாமல் தடுக்கின்றன. அவரவர் பலவீனங்களை ஆதாயமாகப் பயன்படுத்தாமல், திருச்சபை சொற்படி அனைவரும் கேட்பது ஏற்புடையதாகும்.

ஆகவே, மக்களையும் ஏனையோரையும் சரியாக, சீராகத் தயாரித்து, முன்னுரிமை கொடுத்து இந்த அமைப்புக்களை உருவாக்குவது இன்றைய தேவையாகும். இவற்றின் வழியே திருச்சபையின் புனிதப்படுத்தல், தூதுரைத்தல், ஆளுதல் ஆகிய முப்பெரும் பணிகளையும் சிறப்பாகச் செயல்படுத்த அனைவரும் முயல்வோம்.

மறைமாவட்ட மேய்ப்புப்
பணிப் பேரவை

மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவை

அறிமுகம்:

1. திருச்சபை மூவொரு இறைவனின் வாழ்வில் பங்குபெறும் ஓர் உறவுச் சமூகம். அதாவது, இயேசு கிறிஸ்து வழியாக ஆவியில் தந்தையோடு உறவு கொண்டுள்ள ஒரு சமூகம். இவ்வுறவு இறையன்பையும், பிறரன்பையும் மையமாகக் கொண்டது. இச்சமூகம், இறைவனோடு மனிதன் கொள்ளும் உறவு, மனிதன் தங்களுக்குள் கொள்ளும் உறவு இவற்றின் அடையாளமாகவும் கருவியாகவும் விளங்குகிறது.

2. திருச்சபை கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஒரு விசுவாச சமூகம். இதன் தலைவர் இயேசுவே. திருமுழுக்கால் அவரோடு தங்களுக்குள்ளே கொண்டுள்ள இச்சகோதர உறவு, திருச்சபையில் ஆயர், குருக்கள், பொதுநிலையினரிடையே நிலவுகின்றது.

3. எனவே திருச்சபையானது வெறும் திரு ஆட்சி அமைப்பே என்னும் கண்ணோக்கு படிப்படியாக மாறி, இந்தச் சகோதரத்துவ உறவு உருவெடுக்கின்ற நிலையைத் திருச்சபையில் இன்று காண்கின்றோம். வெவ்வேறு மட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ள ஆயர் மன்றம், ஆயர் பேரவைகள், மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவைகள், குருக்கள் மன்றங்கள், பங்குப் பேரவைகள் ஆகியவை இதை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

4. ஆகவே திருச்சபையை வளர்ச்சியுறச் செய்யும் பொறுப்பு திரு ஆட்சியாளர்கள், பொது நிலையினர் அனைவருக்கும் உரித்தானது. எனவே தூய ஆவி வழங்கும் கொடைகளின் பலனைப் பெற விசுவாசிகள், குருக்கள், ஆயர் இவர்களுக்கிடையே ஒன்றிணைப்பும், நட்புறவும் ஏற்பட வேண்டும். இவை செயல் வடிவம் பெறுவதற்கு வழியாக, திருச்சங்கமும் திருச்சட்டமும் மறைமாவட்ட அளவில் குருக்கள், துறவியர், பொதுநிலையினரைக் கொண்ட மேய்ப்புப் பணிப் பேரவை என்னும் அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று பரிந்துரைத்துள்ளன.

குறிப்பு :

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கக் கருத்துக்களின் அடிப்படையிலும், திருச்சபைச் சட்டத் தொகுப்பு விதிகளின் ஒளியிலும் மேய்ப்புப் பணிப் பேரவை அமைக்கப்படுகின்றது. இதில் குறிப்பிட்டிருக்கின்ற வத்திக்கான் சங்க ஏடுகளின் பகுதிகளும் திருச்சபைச் சட்டத் தொகுப்பின் பகுதிகளும் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

விதிமுறைகள்

பிரிவு 1 : பேரவையின் தேவை

1.1. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் ('திருச்சபையில் ஆயர்களின் மேய்ப்புப் பணி' : 27)

"ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் தனிப்பட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக் குழுவை நிறுவுதல் மிகவும் விரும்பத் தக்கது. மறைமாவட்ட ஆயரே இதன் தலைவராக இருப்பார். தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குருகுலத்தாரும் துறவிகளும் பொதுநிலையினரும் இதில் பங்கு பெறுவார்கள். மேய்ப்புப் பணியைச் சார்ந்தவைகளைப் பற்றி ஆராய்வதும் அவைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பதும், அவை பற்றிச் செயல்முறைக்கேற்ற முடிவுகள் எடுப்பதும் இக்குழுவின் அலுவல்களாகும்".

1.2. திருச்சபைச் சட்டத் தொகுப்பு : எண் 511

"ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் மேய்ப்புப் பணிச் சூழலுக்கேற்றவாறு, ஒரு மேய்ப்புப் பணிப் பேரவை ஏற்படுத்தப்பட வேண்டும். மறைமாவட்ட ஆயருடைய அதிகாரத்திற்கு உட்பட்டு, மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி சார்ந்த எல்லாக் காரியங்களையும் ஆராய்ந்து, சீர்தூக்கி, அவைபற்றிச் செயல் முறைக்கேற்ற முடிவுகளை வழங்குவது இந்த மேய்ப்புப் பணிப் பேரவையின் பணியாகும்".

பிரிவு 2: பேரவையின் பெயர்

2. மறைமாவட்டத்தைச் சிறந்த முறையில் வழிநடத்துவதற்கு உதவியாக மறைமாவட்ட ஆயரால் ஏற்படுத்தப்படுவது தான் இந்த ஆலோசனைக்குழு. இது '(மறைமாவட்டத்தின் பெயர்) மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவை' என அழைக்கப்படும். இது இந்த வரையில் "பேரவை" என்றே இனிக் குறிக்கப்படும்.

பிரிவு 3: நோக்கமும் பணியும்

3.1. மறைமாவட்டத்தின் மேய்ப்புப் பணி சார்ந்த பரந்த கண்ணோட்டம், தெளிவான அணுகுமுறை, முன்னுரிமை இவற்றை வகுத்துப் பணிக்குழுக்கள் திட்டமிட்டுச் செயல்பட வழிவகுத்தல்.

3.2. மறைமாவட்டத்தில் மேய்ப்புப் பணி சார்ந்த காரியங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து, ஆராய்ந்து, அவற்றைச் சரிவரப் புரிந்து கொண்டு அதன் அடிப்படையில் நடைமுறைக்கேற்ற திட்டங்களை வகுத்தல்.

3.3. திருச்சபையின் மேய்ப்புப் பணியில் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து நிலையினரையும், ஈடுபடச் செய்து, நற்செய்தி விழுமியங்களின் அடிப்படையில் கிறிஸ்துவ வாழ்வையும், பணியையும் மேம்படுத்துதல்.

3.4. மறைமாவட்டத்திலுள்ள பணிக்குழுக்கள், பங்குப் பேரவைகள், நிதிக்குழுக்கள், பக்த சபைகள், சமூக இயக்கங்கள், துறவு சபைகள் ஆகிய அனைத்தின் தனித்தன்மையையும் செயல்முறையையும் மதித்து, அவை தத்தம் செயல்பாடுகளைச் சரியாகச் செய்ய ஆயருக்கு ஆலோசனை வழங்குதல்.

3.5. மறைமாவட்டத்தில் மறைத்தூதுப் பணி, மறைக்கல்விப் பணி ஆகியவற்றை நடைமுறைப்படுத்தத் தேவையான வழிவகைகளைப் பரிந்துரை செய்தல்.

3.6. பிற கிறிஸ்தவ சபையினர், பிற சமயத்தார் மற்றும் நல்மனம் கொண்ட அனைவருடனும் கலந்துரையாடிச் சமூகத்திலும், மறைமாவட்டத்திலும் வளர்ச்சியும், நீதியும், சமாதானமும் நிலவிட வழிவகுத்தல்.

3.7. பொது நிலையினர் கொண்டுள்ள அறிவையும், அனுபவத்தையும் ஆற்றலையும் பயன்படுத்தி, மறைமாவட்டக் கிறிஸ்துவர்களின் வாழ்வைப் பாதிக்கும் அரசியல், பொருளாதார, கலை, தொழில், பண்பாடு முதலிய பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகளை ஆய்வு செய்து, அலசிப் பார்த்து, அவற்றைக் களையத் தகுந்த வழிமுறைகளை வகுத்தல்.

3.8. மக்களின் அருள் வாழ்வை ஆழப்படுத்தத் தகுந்த வழிமுறைகளைப் பரிந்துரைத்தல்.

3.9. மறைமாவட்டக் கத்தோலிக்க மக்கள் தங்கள் பிரதிநிதிகள் வழி கருத்துப் பரிமாற்றமும், உரையாடலும் நடத்த வாய்ப்பு அளித்தல்.

பிரிவு 4 : இயல்பு (திருச்சபைச் சட்டம், எண் 511)

4.1. மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவை கிறிஸ்துவ வாழ்வையும், பணியையும் அலசி ஆய்ந்து மேம்படுத்தவும், வளப்படுத்தவும் தேவையான ஆலோசனைகளை மறைமாவட்ட ஆயருக்கு நல்கும் குழு ஆகும். இது மறைமாவட்ட நிர்வாகக் குழுவோ அல்லது வெறும் ஆய்வுக் குழுவோ அல்ல.

4.2 சட்டபூர்வமான நிலை (திருச்சபைச் சட்டம் : 514)

சட்டப்படி இப்பேரவை ஓர் ஆலோசனைக் குழுவே (Consultative Body) ஆகும்.

பிரிவு 5 : பேரவை அமைப்பு

5.1. உறுப்பினர்கள்

மறைமாவட்டக் கிறிஸ்தவ விசுவாசிகளாகிய பொதுநிலையினர், துறவறத்தார், மறைமாவட்டக் குருக்கள் ஆகிய முத்தரப்பினரும் பேரவையில் பங்கு பெறுவார்கள். பேரவை உறுப்பினர்கள் மறைமாவட்டம் முழுவதையும் பிரதிபலிக்கும் அடையாளமாக இருக்க வேண்டும். இதில் பெரும்பான்மையினர் பொதுநிலையினராக இருக்க வேண்டும் (50—60%).

5.2. உறுப்பினரிடம் எதிர்பார்க்கும் தகுதிகள்

அ. உயர்ந்த ஒழுக்கம் உடையவர்கள்

ஆ. அறிவு, விவேகம், அனுபவம் உள்ளவர்கள்

இ. திருச்சபையின் ஒழுங்குகளைக் கடைபிடிப்பவர்கள்

ஈ. திறந்த மனதும், மனப்பக்குவமும் உள்ளவர்கள்

உ. 21 வயது நிரம்பியவர்கள்

ஊ. தலைமைப் பண்பைக் கொண்டவர்கள்

எ. அந்தந்த மறைமாவட்டத்தைச் சார்ந்தவர்கள்

ஏ. நீதிக்காகப் பாடுபடும் மனம் உடையவர்கள்.

ஐ. பேரவைச் செயல்களுக்கு நேரத்தையும், ஆற்றலையும் ஒதுக்கக் கூடியவர்கள்

பிரிவு 6 : உறுப்பினர் ஆகும் முறை

6.1. பணித் தகுதியின் அடிப்படையில் இடம் பெறுபவர் :

அ. ஆயர்

ஆ. குருகுல முதல்வர்

இ. மறைமாவட்டப் பொருளாளர்

ஈ. மறை வட்டங்களின் தலைமைக் குருக்கள்

உ. மறைமாவட்டக் குருக்கள் பேரவையின் செயலர்

ஊ. மறைமாவட்டப் பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்

எ. இந்தியக் கத்தோலிக்கத் துறவியர் இணைப்பின் மறைமாவட்டத் தலைவர் / தலைவி

6.2. **தேர்வு முறையில் இடம் பெறுபவர்**

அ. ஒவ்வொரு பங்கும் தேர்ந்தெடுத்து அனுப்பும் ஓர் ஆண் / ஒரு பெண் பொது நிலையினர்.

குறிப்பு : *தேர்ந்தெடுக்கப்படுபவர்களுள் 50% பெண்களாக இருத்தல் வேண்டும். அதற்கான வழிமுறைகளை மறைமாவட்டம் கையாள வேண்டும்.*

ஆ. மறைமாவட்ட ஆயரின் அங்கீகாரம் பெற்று மறைமாவட்டத்தில் இயங்கும் பக்த சபைகள், சங்கங்கள், இயக்கங்களின் பிரதிநிதிகள்.

இ. ஒவ்வொரு மறை வட்டத்திலிருந்தும் தேர்வு செய்யப்படும் குருக்களின் பிரதிநிதிகள்.

ஈ. மறைமாவட்ட அனைத்து வேதியரும் கூடித் தேர்வு செய்யும் ஒரு வேதியர்.

உ. மறைமாவட்டத் துறவு சபையினர் பிரிவிலிருந்து, துறவு சபைகளின் எண்ணிக்கைக்கேற்ப பல்வேறு சபைகளையும், பணியாற்றும் பகுதியையும், சிறப்புப் பணிகளையும் பிரதிபலிக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

6.3. **ஆயரின் நியமன அடிப்படையில் இடம் பெறுபவர்**

- பல்வேறு பணிகள், தனித் திறமை, அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் மறைமாவட்டத்தின் பல்வேறு பிரிவுகளிலிருந்து 10 விழுக்காட்டுக்கு மிகாமல் ஆயரால் நியமிக்கப்படலாம்.
- பொது நிலையினர் 50%க்கு மேல் இருக்க வேண்டும் என்னும் அடிப்படையில் இந்த நியமனம் இருக்கலாம்.

6.4. அனைத்து உறுப்பினருக்கும் வாக்குரிமை உண்டு.

6.5. நியமனக் கடிதம் :

உறுப்பினர் அனைவருக்கும் நியமனக் கடிதம் ஆயரால் எழுத்து வடிவில் அளிக்கபபடும்.

குறிப்பு : *உறுப்பினர் தேர்வின் போது, மொத்த எண்ணிக்கையில்*

1. ஆண் பெண் சமத்துவம்
2. பங்கின் பிரதிநிதிகள்
3. இளைஞர் பிரதிநிதித்துவம் ஆகியவை கவனிக்கப்பட வேண்டும்.

பிரிவு 7 : பணிக்காலம்

7.1. பேரவையின் உறுப்பினர் பணிக்காலம் 3 ஆண்டுகள்.

7.2. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மீண்டும் ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படலாம். 3 ஆண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு அவர்கள் திரும்பவும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

7.3. மறைமாவட்டப் பேரவையில் ஆயரின் நியமன அடிப்படையில் இடம்பெறும் உறுப்பினர்களின் பணிக்காலம் 3 ஆண்டுகள்.

இவர்கள் மீண்டும் ஒரு முறையே தொடர்ந்து நியமிக்கப்படலாம்.

பிரிவு 8: பேரவை உறுப்பினரின் பணி விலகலும், பணி விலக்கமும்

8.1. பேரவை உறுப்பினர் ஒருவர் தம் பணியிலிருந்து விலக விரும்பினால், அவர் ஆயருக்குக் கடிதம் மூலம் தெரிவித்து அவரது ஒப்புதல் பெற்று உறுப்பினர் பணியிலிருந்து விலகலாம்.

8.2. ஒருவர் எந்தக் குழுவின் பிரதிநிதியாகப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாரோ அவர் அந்தக் குழுவில் உறுப்பினர் நிலையை இழந்தால் பேரவையிலும் உறுப்பினர் நிலையை இழப்பார். இவ்வாறு ஏற்படும் காலியிடம் ஒரு மாதத்திற்குள் நிரப்பப்பட வேண்டும்.

8.3. எழுத்து மூலம் முன்அறிவிப்பின்றியும் தகுந்த காரணங்களின்றியும் இரண்டு கூட்டங்களுக்குத் தொடர்ந்து வராதவர் உறுப்பினர் நிலையை இழப்பார். இவ்வாறு ஏற்படும் காலியிடம் ஒரு மாதத்திற்குள் நிரப்பப்பட வேண்டும்.

8.4. முக்கிய காரணங்களுக்காக (பேரவை நோக்கங்களுக்கும் திருச்சபைச் சட்டங்களுக்கும் முரணாக நடத்தல் போன்றவை) உறுப்பினர் ஒருவரைப் பணி விலக்கம் செய்யும் அதிகாரம் தலைவருக்கு மட்டுமே உண்டு.

8.5. உறுப்பினர் நிலையிலிருந்து விலகலும், விலக்கம் பெறலும் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு பேரவைத் தலைவரால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

பிரிவு 9 : நிர்வாகிகள்

9.1.1. பேரவைத் தலைவர், துணைத் தலைவர், செயலர், துணைச் செயலர் ஆகியோர் பேரவையின் நிர்வாகிகள் ஆவர்.

9.1.2. தலைவர், துணைத் தலைவர் இவர்களைத் தவிர ஏனையோர் இரகசிய வாக்கெடுப்பு மூலம் பங்கேற்கும் உறுப்பினர்களின் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

9.1.3. செயலர், துணைச் செயலர் இவர்களில் ஒருவர் பெண் பொது நிலையினராக இருத்தல் வேண்டும்.

9.2.1. தலைவர்

ஆயரே மறைமாவட்டப் பேரவையின் நிலையான தலைவர். இவரே பேரவையைக் கூட்டவும், வழிநடத்தவும் அதிகாரம் கொண்டுள்ளார். பேரவை முடிவுகளை வெளியிடுவதும், செயற்குழுவின் துணையோடு அவற்றை நடைமுறைப்படுத்துவதும் இவரையே சாரும்.

9.2.2. துணைத் தலைவர்

மறைமாவட்டக் குருகுல முதல்வர் பேரவையின் துணைத் தலைவர் ஆவார். தலைவர் இல்லாதபோது அவரது இசைவின்படி பேரவையைக் கூட்டி வழிநடத்தும் பொறுப்பு இவரைச் சார்ந்ததே.

9.2.3. செயலர்

1. ஒரு பொது நிலையினரே செயலராக இருத்தல் வேண்டும். கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்களின் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் இவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
2. பேரவைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலைச் செயற்குழுவில் விவாதித்துத் தலைவரின் ஒப்புதலுடன் தயாரிப்பதும், கூட்ட அறிவிப்புக் கடிதங்களை உரிய காலத்தில் அனுப்புவதும் இவரது கடமை.
3. இவர் தலைவரின் இசைவுடன் பேரவையைக் கூட்டவும், கூட்ட நிகழ்வுகளையும் தீர்மானங்களையும் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்துப் பேரவையில் சமர்ப்பிக்கவும் கடமைப்பட்டவர்.
4. பேரவை தொடர்பான எல்லாக் கடிதத் தொடர்புகளையும் பேரவைத் தலைவரின் இசைவின்படி இவரே செய்ய வேண்டும். இக்கடிதங்களின் நகல்களைப் பாதுகாப்பதும் இவரது பொறுப்பே. கடிதங்களின் நகல்கள் அடங்கிய மற்றொரு கோப்பைத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டியதும் இவரது கடமையாகும்.

9.2.4. துணைச் செயலர்

1. இவரும் ஒரு பொதுநிலையினராக இருத்தல் வேண்டும். இவரும் பேரவைக் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்களால் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப் படுவார்.

2. துணைச் செயலர் செயலருடன் இணைந்தும் அவரில்லாத போது தாமாகவும் செயலரின் பொறுப்புக்களைக் கவனிக்க வேண்டும்.

பிரிவு 10 : பேரவைக் கூட்டங்கள்

10.1. மறைமாவட்டப் பேரவைக் கூட்டம் (பொதுக்குழு) கட்டாயம் ஆறு மாதங்களுக்கு ஒருமுறையாவது கூட்டப்பட வேண்டும்.

10.2. இது தவிர தேவை ஏற்படும்போதெல்லாம் ஆயர் இப்பேரவையைக் கூட்டலாம்.

10.3. ஆயர் இல்லாதபோது பேரவை விதிகளுக்கு அமைந்து துணைத் தலைவர் இப்பேரவையைக் கூட்டுவார்.

10.4. பேரவை உறுப்பினர்களில் 1/3 பங்கினர் விரும்பும்போது தலைவர் பேரவையைக் கூட்டலாம்; ஆனால் மேற்படி விருப்பம் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட வேண்டும்.

10.5. பேரவைக் கூட்டத்தில் விவாதப் பொருள் வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும்.

10.6. பேரவைக் கூட்டத்திற்குக் குறைந்த அளவு உறுப்பினர் வருகை (Quorum) மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 1/3 பகுதியாகும்.

பிரிவு 11 : கூட்டம் அறிவித்தல்

11.1. பேரவைக் கூட்டம் நடைபெறும் நாளுக்கு 21 நாட்களுக்கு முன்பே செயலர் எழுத்து மூலம் கூட்ட அறிவிப்பை உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டும்.

11.2. அந்த அறிவிப்பில் கூட்டம் நடைபெறும் இடம், நாள், நேரம், விவாதப் பொருட்கள் ஆகியவை தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

பிரிவு 12 : விவாதப் பொருள்

12.1. விவாதப் பொருள் பற்றிய பரிந்துரைகளை உறுப்பினர்கள் தெரிவிக்க விரும்பினால், அவர்கள் அவற்றை 15 நாட்களுக்கு முன்பாவது செயலர் பெற்றுக் கொள்ளுமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

12.2. பேரவையில் எடுக்கப்படும் முடிவுகள் பேரவைக் கூட்டங்களில் பங்கு பெறுபவர்களின் அறுதிப் பெரும்பான்மை ஆதரவு பெற்றவையாக இருத்தல் வேண்டும்.

பிரிவு 13 : செயற்குழு அமைப்பு

13.1. அமைப்பு

அ. பொதுக் குழுவில் உள்ளதுபோல, செயற்குழுவிலும் பொது நிலையினர் எண்ணிக்கை மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருக்க வேண்டும். (50–60%)

ஆ. பொதுநிலையினரின் ஆண், பெண் எண்ணிக்கை சமமாக இருக்க வேண்டும்.

13.2. செயற்குழு உறுப்பினர்

அ. ஆயர்

ஆ. குருகுல முதல்வர்

இ. மறைமாவட்டப் பொருளர்

ஈ. பேரவைச் செயலர்

உ. மறைமாவட்டப் பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்

ஊ. இந்திய கத்தோலிக்கத் துறவிகள் இணைப்பின் மறைமாவட்டத் தலைவர்/ தலைவி

எ. மறைவட்ட அதிபர்கள்

ஏ. ஒவ்வொரு மறை வட்டத்திலிருந்தும் குருக்கள் பிரதிநிதி

ஐ. மறைவட்டத்திலிருந்து பொது நிலையினரின் பிரதிநிதிகளாக ஆண்களும் பெண்களும்.

13.3. நிர்வாகிகள்

அ. தலைவர்

1. செயற்குழுவின் தலைவர் ஆயரே.

ஆ. செயலர்

1. பேரவையின் செயலர் செயற்குழுவின் செயலராகவும் இருப்பார்.

13.4. செயற்குழுக் கூட்டம்

1. குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது செயற்குழு கூட்டப்பட வேண்டும். அது தவிர, தேவையின் அடிப்படையில் செயற்குழு கூட்டப்படலாம்.

2. செயற்குழுக் கூட்டத்திற்குக் குறைந்த அளவு உறுப்பினர் வருகை (Quorum) மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 1/2 பகுதியாகும்.

13.5. பணி

1. பேரவைக் கூட்டத்திற்கான விவாதப் பொருள் நிரலை உருவாக்குதல்.
2. ஆயரின் இசைவாணையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட பேரவைப் பரிந்துரைகளையும், முடிவுகளையும் செயல்படுத்துதல்.
3. பேரவை விதிமுறைகளில் எந்த ஒரு பிரிவிலோ அல்லது துணைப் பகுதியிலோ விளக்கமளிப்பதில் ஐயப்பாடு எழுந்தால் அவற்றிற்கு அதிகாரப் பூர்வத் தீர்வு வழங்குதல். அதன் தீர்வு இறுதியானது.

பிரிவு 14: பேரவை விதிகள் திருத்தம்

1. பேரவை விதிகள் திருத்தப்படுகின்ற பொழுது, வந்திருப்போரின் ஆலோசனைகளைக் கேட்டு, ஆயரே திருத்தங்கள் செய்வார்.
2. திருத்தப்பட வேண்டிய விதிமுறைகள் பற்றிய பரிந்துரைகள் 15 நாட்களுக்கு முன்னதாகவே உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

பிரிவு 15: பேரவை செயலிழத்தல்

1. தகுந்த காரணத்தை முன்னிட்டுப் பேரவையைக் கலைக்க அதிகாரம் கொண்டவர் ஆயரே.
2. மறைமாவட்டத்திற்கு ஆயர் இல்லாது போனால், அதாவது பணி ஒய்வு, வேறொரு மறைமாவட்டத்திற்கு மாற்றம், இறப்பு (Sede Vacante) ஆகிய சூழ்நிலைகளில், மறைமாவட்டப் பேரவை தானாகவே செயலிழக்கும். பேரவையில் அங்கம் வகிப்போர் அனைவரும் தம் உறுப்பினர் நிலையை இழப்பர்.

பிரிவு 16 : பொது விதிகள்

1. நிர்வாகிகளோ, மற்ற உறுப்பினரோ பேரவைத் தலைவரின் அனுமதியின்றி எந்த அறிக்கையையும் பத்திரிகைகளுக்குக் கொடுக்கக் கூடாது.
2. பணிக்காலம் முடிந்த அல்லது தாமாகவே பணி விலகிய அல்லது பணி நீக்கம் பெற்ற நிர்வாகிகள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களையும், பொருட்களையும் புதிய நிர்வாகிகளிடம் 15 நாட்களுக்குள் ஒப்படைக்க வேண்டும்.
3. பேரவையைச் சார்ந்த கடிதத் தொடர்புகளை உறுப்பினர்கள் செயலருடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

4. குறிப்பிட்ட விவாதப் பொருள்களை ஆய்வதற்குப் பேரவை தனிக் குழுக்களை ஏற்படுத்தலாம்.

5. மறைமாவட்ட மேய்ப்புப் பணியைச் சீராக ஒருங்கிணைக்கும் பொருட்டு மறைமாவட்டப் பேரவையின் செயல்பாடுகளைக் குருக்கள் பேரவை, மறைமாவட்ட ஆலோசகர் குழு, மறைமாவட்ட மேய்ப்புப் பணி ஆணைக்குழுக்கள் ஆகியவற்றின் கவனத்திற்கும், இக்குழுக்களின் செயல் பாடுகளைப் பேரவையின் கவனத்திற்கும் தேவைக்கேற்ப ஆயர் கொண்டு வரலாம்.

பிரிவு 17 : ஆயரின் அனுமதியும் பிரகடனமும்

ஆயர் கீழ்க்கண்டவாறு பேரவையைப் பிரகடனம் செய்யலாம்:

'தலத் திருச்சபையைக் கட்டி எழுப்பும் பணியில் ஆயரோடு இணைந்து செயல்பட ஏற்படுத்தப்பட்ட மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவையின் இயல்பு, சட்டப் பூர்வமான நிலை, பணிகள் ஆகியவற்றைச் சரியாகவும் போதிய அளவிலும் நிர்ணயம் செய்ய, திருமறைச் சட்டம் 513, பிரிவு – 1ன் படி . . . . நாளில் நடந்த தற்போதைய மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவைக் கூட்டத்தில் சொல்லப்பட்ட கருத்துக்களைக் கேட்டோம்.

(மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவையைப் புதிதாக ஆரம்பிக்கும் நிலையிருந்தால் "தற்போதைய மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவைக் கூட்டத்தில்" என்பதற்குப் பதில் "குருக்கள் மன்றத்தில்" அல்லது "குருக்கள் பேரவையில்" என்று குறிப்பிடவும்.)

மேலே கொடுக்கப்பட்டுள்ள ". மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவையின் விதிமுறைகளை" இதன் மூலம் நான் அனுமதித்துப் பிரகடனப்படுத்துகிறேன். இவை . . . . நாளிலிருந்து அமுலுக்கு வரும்.

. . . . ஆண்டு . . . . திங்கள் . . . . நாளன்று கொடுக்கப்பட்டது.'

மறைமாவட்டச் செயலகப் பொறுப்பாளர். மறைமாவட்ட ஆயர்.

பிற்சேர்க்கை :

மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவை பற்றிய திருச்சபை ஏடுகளும் சட்டங்களும் :

1. வத்திக்கான் சங்க ஏடுகள்

1.1. திருச்சபையில் ஆயர்களின் மேய்ப்புப் பணி : எண் 27, பத்தி 5.

"ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் தனிப்பட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக் குழுவை நிறுவுதல் மிகவும் விரும்பத்தக்கது. மறைமாவட்ட ஆயரே இதன் தலைவராக இருப்பார். தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குருகுலத்தாரும் துறவிகளும் பொது நிலையினரும் இதில் பங்கு பெறுவார்கள். மேய்ப்புப் பணியைச் சார்ந்தவைகளைப் பற்றி ஆராய்வதும், அவற்றைச் சீர்தூக்கிப் பார்ப்பதும், அவற்றைப்பற்றிச் செயல்முறைக்கேற்ற முடிவுகள் எடுப்பதும் இக்குழுவின் அலுவல்களாகும்".

1.2. பொதுநிலையினரின் மறைத்தூதுப் பணி : எண் 26, பத்தி 1.

"மறைமாவட்டங்களில் நற்செய்தியை அறிவித்துப் புனிதப்படுத்தும் துறையிலோ, பிறரன்பு, சமுதாயத் துறைகளிலோ, வேறு துறைகளிலோ திருச்சபை ஆற்றும் மறைத்தூது அலுவல்களில் உதவும்படியாக முடிந்த மட்டும் சில அறிவுரைக் குழுக்களை அமைக்க வேண்டும். இவற்றில் குருகுலத்தாரும் துறவியரும் பொதுநிலையினரோடு தக்கபடி ஒத்துழைப்பார்களாக. இந்த அறிவுரைக் குழு வெவ்வேறு பொதுநிலையினர் கழகங்களும் அவை மேற்கொள்ளும் முயற்சிகளும் இணைந்து இயங்கும்படி உதவமுடியும். இதனால் இக்கழகங்கள் ஒவ்வொன்றின் தனிப் பண்பும் தனித்தியங்கும் தன்மையும் பாதிக்கப்படுவதில்லை".

1.3. திருமறையின் மறை அறிவிப்புப் பணி : எண் 30, பத்தி 2.

"பணிகளை அதிகச் சிறப்பாக ஒருமுகப்படுத்தும் வண்ணம் ஆயர், மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு ஒன்றினைக் கூடிய மட்டும் ஏற்படுத்த வேண்டும். இக்குழுவில் குருகுலத்தார், துறவியர், பொது நிலையினர் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வழியாகப் பங்கேற்பர்".

2. திருச்சபைச் சட்டத் தொகுப்பு

2.1. எண் : 511

ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் மேய்ப்புப் பணிச் சூழலுக்கேற்றவாறு, ஒரு மேய்ப்புப் பணிப் பேரவை ஏற்படுத்தப்பட வேண்டும். மறைமாவட்ட ஆயருடைய அதிகாரத்திற்கு உட்பட்டு, மறைமாவட்டத்தின் அனைத்து மேய்ப்புப் பணிசார்ந்த காரியங்களை ஆராய்ந்து, சீர்தூக்கி அவை பற்றிச்

செயல்முறைக்கேற்ற முடிவுகளை வழங்குவது இந்த மேய்ப்புப் பணிப் பேரவையின் பணியாகும்.

2.1. **எண் : 512**

1. மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவையானது, கத்தோலிக்கத் திருச்சபையுடன் முழு உறவுடன் இருக்கும் குருக்கள், துறவறத்தார், சிறப்பாகப் பொதுநிலையினர் ஆகிய கிறிஸ்துவ விசுவாசிகளைக் கொண்டதாகும். மறைமாவட்ட ஆயர் தீர்மானிக்கும் விதத்தில் இவர்கள் உறுப்பினர்களாவர்.

2. இந்த மறைமாவட்டப் பேரவையின் உறுப்பினர்களாகக் கூடிய கிறிஸ்துவ விசுவாசிகள், மறைமாவட்டம் முழுவதிலும் உள்ள இறைமக்கள் அனைவரையும் பிரதிபலிக்கும் வண்ணம், மறைமாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும், பலவிதமான சமூகச் சூழல்கள், தொழில்களிலிருந்தும், மற்றும் தனியாகவோ பிறருடன் சேர்ந்தோ அப்போஸ்தலப் பணியில் ஈடுபட்டு உழைத்துக் கொண்டிருப்போரிடையிலிருந்தும் தெரிவு செய்யப்படுவர்.

3. உறுதியான விசுவாசமும், மிகச் சிறந்த நல்லொழுக்கமும் விவேகமும் உடைய கிறிஸ்துவ விசுவாசிகளே இப்பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர்.

2.3. **எண் : 513**

1. ஆயர் வகுத்துத் தரும் விதிமுறைகளுக்கேற்ப இப்பேரவையானது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நியமிக்கப்படும்.
2. மறைமாவட்டம் ஆயரின்றி (காலியாக) இருக்கும்பொழுது, இப்பேரவையும் காலாவதியாகிவிடும்.

2.4. **எண் : 514**

1. மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவைக்கு, ஆலோசனை வாக்கு மட்டுமே உண்டு. அப்போஸ்தலப் பணியின் தேவைக்கேற்ப இப்பேரவையைக் கூட்டுவதற்கும், பேரவைக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்கும் உள்ள உரிமை மறைமாவட்ட ஆயருக்கு மட்டுமே உண்டு. பேரவைக் கூட்டத்தில் பேசப்பட்ட காரியங்களை எல்லா மக்களுக்கும் தெரியப்படுத்தும் உரிமையும் அவருக்கு மட்டுமே உண்டு.

2. இப்பேரவையானது வருடத்திற்கு ஒரு முறையாவது கூட்டப்பட வேண்டும்.

பங்கு மேய்ப்புப்
பணிப் பேரவை

பங்கு மேய்ப்புப் பணிப்பேரவை

அறிமுகம்:

1. ஆவியானவர் திருச்சபையின் உள்ளுயிராய் இருந்து அதனை வழிநடத்தி வருகின்றார்; கிறிஸ்துவ விசுவாசிகள் அனைவரிலும் செயல்படுகின்றார்; தம் வரங்களைப் பொது நன்மைக்காக அனைவருக்கும் பகிர்ந்தளிக்கின்றார் (1 கொரி. 12: 4–7). தாங்கள் பெற்ற வரங்களை மற்றவர்களின் நலனுக்காகப் பயன்படுத்தக் கிறிஸ்துவின் விசுவாசிகள் கடமைப்பட்டுள்ளனர் (1 இரா 4:10). மேலும் திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் என்னும் அருட்சாதனங்களின் அடிப்படையில் திருச்சபையின் பணியில் பங்கு பெறும் கடமையும் உரிமையும் கிறிஸ்துவின் விசுவாசிகள் அனைவருக்கும் உண்டு. எனவே, இறைமக்களில் செயல்படும் கடவுளின் ஆவியை அணைத்துவிடாமல் (1 தெச. 5:19), ஆவியின் செயல்பாடுகளைத் தேர்ந்து தெளிந்து (1 கொரி 12:10), திருச்சபையை வழி நடத்துவது திருச்சபைத் திருமேய்ப்பர்களின் கடமையும், உரிமையுமாகும். ஆவியின் குரலுக்குச் செவிமடுக்கவும், ஆவியின் வரங்களைப் பொது நன்மைக்காகப் பயன்படுத்தவும் உதவும் திருச்சபையின் அமைப்புக்களில் ஒன்று பங்கு மேய்ப்புப் பணிப் பேரவையாகும்.

2. திருச்சபை இறைவார்த்தையிலும் அருளடையாளக் கொண்டாட்டத்திலும் ஒன்று கூட்டப் பெற்று ஆயர்களின் தலைமையின் கீழ் தலத்திருச்சபைகளாகத் துலங்குகிறது.

பங்கு என்பது மறைமாவட்டத்தின் ஓர் உயிரணுவைப் போன்றுள்ளது (பொது. அப். 10). பங்குகளின் வளர்ச்சியே மறைமாவட்டத்தின் வளர்ச்சி, உலகளாவிய திருச்சபையின் வளர்ச்சி. பங்குகள் வளர்ச்சியுற வேண்டுமானால் பொதுநிலையினரும் ஆட்சியாளரும் இணைந்து செயல்பட வேண்டும் (இன்.உல.திரு. 48).

3. "இவர்கள் (பொது நிலையினர்) திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவோடு ஒருடலாக்கப் பெற்று, இறைமக்களாக உருப்பெறுகின்றனர்; தங்களுக்கே உரித்தான முறையில் கிறிஸ்துவின் குருத்துவ, இறைவாக்கு உரைக்கும், அரச அலுவல்களில் பங்கு கொள்கின்றனர். திருச்சபையில் கிறிஸ்தவர் அனைவரும் ஆற்ற வேண்டிய பணியிலே தங்களுக்குரிய பங்கை உலகிலே ஆற்றி வருகின்றனர்".

"உலகக் காரியங்களில் ஈடுபட்டு உழைக்குங்கால், அவற்றை இறைவனின் திட்டப்படி நெறிப்படுத்துவதன் மூலம் இறைவனின் அரசை அமைக்கத் தேடுவது தங்களது தனிப்பட்ட அழைப்பால் பொது நிலையினரைச் சார்ந்தது" (திருச்சபை 31).

4. "மேன்மையிலும், கிறிஸ்துவின் உடலை வளர்ச்சியுறச் செய்ய விசுவாசிகள் அனைவருக்கும் பொதுவாயுள்ள பணியிலும் யாவரும் உண்மையிலேயே சமமான பங்கு பெறுகின்றனர்" (திருச்சபை 32).

5. "திருச்சபையின் மீட்புப் பணியில் பங்கு பெறுவதே பொதுநிலையினரின் மறைத்தூதுப் பணியாகும். இந்த மறைத்தூதுப் பணி ஆற்றுவதற்கே திருமுழுக்கு, உறுதிபூசுதல் ஆகியவற்றின் மூலம் அனைவரும் ஆண்டவரால் அதிகார பூர்வமாக அனுப்பப் பெற்றிருக்கின்றனர்".

"எந்தெந்த இடங்களில் பொதுநிலையினரால் மட்டுமே திருச்சபை நிலத்தின் உப்பாகத் திகழ முடியுமோ, அந்தந்த இடங்களிலும் சூழ்நிலையிலும் திருச்சபையைப் பிரசன்னமாக்கிச் செயலாற்றுவதாய் அமைக்கவே அவர்கள் தனிப்பட்ட முறையிலே அழைக்கப் பெற்றிருக்கின்றனர்".

"அவர்களின் ஆற்றலுக்கும், காலங்களின் தேவைகளுக்கும் ஏற்பத் திருச்சபையின் மீட்பு அலுவலிலே ஆர்வமுடன் பங்குபெற அவர்களுக்கு எல்லா வழிவகைகளும் அளிக்கப்பட வேண்டும்" (திருச்சபை. 33).

6. "பொது நிலையினரும் திரு ஆட்சியாளரும் இணைந்து செயல்படாத இடத்தில் திருச்சபை உண்மையாகவே வேரூன்றவில்லை. அது முழு வாழ்வையும் கொண்டிருக்காது" (திரு மறைத்தூதுப் பணி 21).

7. "தம்முடைய (கிறிஸ்துவின்) வாழ்வோடும் பணியோடும் அவர்களை இறுகப் பிணைத்து, இறைவனின் மாட்சிக்காகவும் மக்களின் மீட்புக்காகவும் ஆன்மீக வழிபாட்டை நிறைவேற்றும்படி, கிறிஸ்து தம்முடைய குருத்துவ அலுவலில் அவர்களுக்குப் பங்களிக்கிறார்" (திருச்சபை 34).

8. "தம்முடைய பெயராலும் ஆணையுரிமையாலும் போதிக்கும் திருச்சபை அதிகாரிகள் மூலம் மட்டுமல்ல, பொதுநிலையினர் வழியாகவும் இவ்வலுவலை அவர் (கிறிஸ்து) ஆற்றிவருகின்றார்".

"உலகின் சாதாரணச் சூழ்நிலைகளில் நற்செய்தியை அறிவிப்பின், அதாவது வாழ்வென்னும் சான்றினாலும் போதகத்தினாலும் கிறிஸ்துவைப் பிறருக்கு எடுத்துரைப்பின், இந்நற்செய்தி அறிவிப்பு தனிச்சிறப்பு பெறும்; தனிப்பட்ட முறையில் பயனும் விளைவிக்கும்".

"உலகக் கவலைகளிடையே வாழும்போதும் பொதுநிலையினர் உலகிலே நற்செய்தியை அறிவிக்கச் சிறந்த பணி ஆற்ற முடியும், ஆற்றவும் வேண்டும்" (திருச்சபை 35).

9. "கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதே ஆள்வதாகும். ஆண்டவர் தம் அரசைப் பொது நிலையினர் மூலமாகப் பரப்ப விரும்புகிறார்".

"உலகப் பழக்க வழக்கங்களும், வாழ்க்கை நிலைகளும் பொதுவாகப் பாவத்திற்குத் தூண்டுதலாக அமையுமேயானால் பொது நிலையினர் தங்கள் ஆற்றலனைத்தையும் திரட்டி அவற்றைத் திருத்தி அமைத்து, அதன்மூலம் அவை அனைத்தையும் நீதி நெறிக்கேற்பச் சீர்படுத்தி, நற்பண்புடைத்த வாழ்விற்குத் தடையாக அமையாமல் உறுதுணையாக இருக்குமாறு செய்ய வேண்டும்" (திருச்சபை 36).

10. "பொது நிலையினரின் விருப்பங்களைக் குருக்கள் சகோதர வாழ்க்கையோடு எண்ணிப் பார்ப்பதுடன் அவர்களின் பட்டறிவையும் பல துறைகளில் அவர்களுக்குள்ள செயல் திறமைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுபோலத் திருச்சபையின் பணிகள் சிலவற்றைப் பொது நிலையினரிடம் நம்பிக்கையுடன் ஒப்படைக்க வேண்டும். சுதந்திரமும் வாய்ப்பும் அளிப்பதுடன், அவர்களையே இவ்வேலைகளை மேற்கொள்ளவும் செய்ய வேண்டும்" (குரு. பணியும் வாழ்வும் 9; திரு. 37).

11. "இறைவனின் பிள்ளைகளுக்கும் கிறிஸ்துவில் சகோதரர்களுக்குமுரிய சுதந்திரத்தோடும் நம்பிக்கையோடும் இவர்கள் (பொது நிலையினர்) தங்கள் தேவைகளையும் விருப்பங்களையும் இந்த மேய்ப்பர்களிடம் தெரிவிப்பார்களாக. தம் அறிவு, தகுதி, மேன்மைக்கேற்பத் திருச்சபையின் நலனைச் சார்ந்தவற்றில் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க அவர்களுக்கு உரிமை உண்டு; சில வேளைகளில் அது அவர்களது கடமையும் ஆகின்றது. இந்த அலுவல் இதற்கென்றே திருச்சபையால் அமைக்கப் பெற்ற அமைப்புக்களின் மூலம் தேவைகளுக்கேற்ப நிறைவேற்றப்படலாம்" (திருச்சபை 37).

12. "மறைமாவட்டங்களில் நற்செய்தி பரப்பும், புனிதப்படுத்தும் துறையிலோ, பிறரன்பு, சமுதாயத் துறைகளிலோ வேறு துறைகளிலோ திருச்சபை ஆற்றும் அப்போஸ்தல அலுவலில் உதவும்படியாக முடிந்த மட்டும் சில அறிவுரைக் குழுக்களை அமைக்க வேண்டும்". (பொது நிலை. அப். 26).

13. கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபையை வளர்ச்சியுறச் செய்வது இறைமக்களாகிய நம் அனைவரின் உரிமையும் கடமையும் ஆகும். இக்கடமையை நாம் சகோதர அடிப்படையிலும், கூட்டுப் பொறுப்பிலும், கூட்டுச் செயல் முறையிலும் ஒவ்வொரு பங்கிலும் ஆற்றிட வழிவகுக்கும் ஒரு மேய்ப்புப்பணி அமைப்பே "பங்கு மேய்ப்புப் பணிப் பேரவை" அல்லது "பங்குப் பேரவை" என்னும் அமைப்பு.

விதிமுறைகள்

பிரிவு 1: பேரவையின் தேவை

1. திருச்சபைச் சட்டத் தொகுப்பு, எண் : 536

1.1. "மறைமாவட்ட ஆயர், குருக்கள் மன்றத்தைக் கலந்தாலோசித்த பின், ஏற்ற சூழ்நிலை இருப்பதாகக் கருதினால் ஒவ்வொரு பங்கிலும் ஒரு பங்கு மேய்ப்புப் பணிப் பேரவை அமைத்திட வேண்டும். பங்குத் தந்தை தலைமை வகிக்கின்ற இப்பேரவையில் கிறிஸ்தவ விசுவாசிகள் பங்குத் தளத்தில் மேய்ப்புப் பணிப் பொறுப்பைத் தங்கள் பணித் தகுதியில் ஆற்றுபவர்களோடு சேர்ந்து, மேய்ப்புப் பணியை வளமுறச் செய்வதற்குத் தங்களின் உதவியை நல்குவர்".

1.2. "பங்கு மேய்ப்புப் பணிக்குழுவிற்கு ஆலோசனை வழங்கும் உரிமை மட்டுமே உண்டு. இது மறைமாவட்ட ஆயர் அளிக்கின்ற விதிமுறைகளுக்கேற்பச் செயல்படும்".

பிரிவு 2: பேரவையின் பெயர்

2.1. இப்பேரவை "பங்கு மேய்ப்புப் பணிப் பேரவை" எனப்படும். இதனைச் சுருக்கமாகப் 'பங்குப் பேரவை' என்றும் கூறலாம்.

பிரிவு 3: பேரவையின் இயல்பு

3.1. பணித் தகுதியின் அடிப்படையில் உள்ளவர்களும், பங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் பங்குத் தந்தையரின் நியமன உறுப்பினரும் பங்குத் தந்தையின் தலைமையில் ஒருங்கிணைந்து அந்தப் பங்கு மக்களின் கிறிஸ்துவ வாழ்வு அனைத்துத் துறைகளிலும் செழித்தோங்கும் விதத்தில் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தும் குழுவே பங்குப் பேரவை.

3.2. பங்குப் பேரவை ஓர் ஆலோசனைக்குழு. இது மறைமாவட்ட ஆயர் அளிக்கும் விதிமுறைகளுக்கேற்பச் செயல்படும்.

3.3. பங்குப் பேரவை, திருச்சபைச் சட்டங்களுக்கும், ஆயரின் ஆணைகளுக்கும் உட்பட்டு, பங்குத் தந்தையருடன் இணைந்து கலந்துரையாடி, பங்கின் பொது நலமொன்றையே குறிக்கோளாகக் கொண்டு சகோதர உறவுடன் முடிவுகள் எடுத்துச் செயல்படுத்த வேண்டும்.

3.4. பங்குப் பேரவையின் பரிந்துரைகளைச் செயல்படுத்தும் பொறுப்பு உறுப்பினரையே சாரும்.

3.5. பங்கு மக்களை விசுவாசத்திலும், அர்ப்பண உணர்விலும் கட்டியெழுப்பி, பல்வேறு துறைகளில் மக்களுக்கு விழிப்புணர்வு

கொடுத்துச் செயல்படும் அமைப்பாகவும், மக்களின் நம்பிக்கை பெற்ற முன் மாதிரிகை அமைப்பாகவும் இது செயல்பட வேண்டும்.

3.8. விசுவாசக் கோட்பாடு, திருச்சபைச் சட்டம், போதனை, அறநெறி, மறைமாவட்டப் பொது விதிமுறைகள் இவற்றை மதித்து ஆலோசனைகளும் பரிந்துரைகளும் இப்பேரவை வழங்கலாம்.

பிரிவு 4 : பேரவையின் நோக்கங்களும் பணிகளும்

4.1 பங்கு மக்களை விசுவாச வாழ்வு – செப வாழ்வு – பகிர்தல் வாழ்வு – நீதி வாழ்வு ஆகியவற்றில் கட்டியெழுப்பிக் குடும்ப உணர்வோடு பங்கில் வாழப் பயிற்றுவித்தல்.

4.2. பங்கில் இயங்கி வரும் பல்வேறு பக்த சபைகள், இயக்கங்கள் ஆகியவற்றின் தனித்தன்மைகளை மதித்து, அவற்றுடன் நல்லுறவையும், ஒற்றுமையையும் வளர்த்தல்.

4.3. பங்கில் அடித்தளக் கிறிஸ்துவ சமூகங்களை உருவாக்கி வலுப்படுத்துதல்.

4.4. பங்கின் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.

4.5. பங்கின் தேவைகளுக்கு ஏற்ப நீண்ட கால, குறுகிய காலத் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தல்.

4.6. மறைமாவட்ட ஆயர் தரும் ஆலோசனைகளையும் முடிவுகளையும் செயல்படுத்துதல்.

4.7. பங்கில் நிகழும் விழாக்கள், ஏனைய நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு மக்கள் ஒத்துழைப்புடன் மக்கள் வளர்ச்சிக்குப் பயனுள்ள விதத்தில் நடத்துதல்.

4.8. பங்கின் உடனடித் தேவைகள், பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப் பங்குத் தந்தைக்கு உதவுதல்.

4.9. பங்கின் நல்வாழ்வுக்காகத் திருவழிபாட்டுக்குழு, நற்செய்திப் பணிக்குழு, குடும்ப நலக்குழு, பெண்கள் குழு, இளைஞர் குழு, சமூக மேம்பாட்டுக்குழு, சமாதானக்குழு, கல்விக்குழு, கலைக்குழு, பல்சமய உரையாடல் குழு போன்ற குழுக்களை அமைத்து அவற்றைத் திறம்படச் செயல்பட வைத்தல்.

4.10. கிறிஸ்துவின் முப்பெரும் பணிகளான புனிதப்படுத்தும் பணி, போதிக்கும் பணி, ஆளும் பணி ஆகியவற்றில் பங்கேற்கப் பங்கு மக்கள் அனைவருக்கும் தேவையான பயிற்சிகள், கூட்டங்கள், கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்தல்.

பிரிவு 5: பேரவை உறுப்பினர்

பங்குப் பேரவையின் உறுப்பினர்கள் பங்குத் தளத்தில் எல்லா நிலைகளிலும் உள்ள ஆண்கள் பெண்கள் ஆகியோரின் எண்ணங்கள் பிரதிபலிக்கும் முறையில் கீழ்வரும் மூன்று வகைகளில் இடம் பெறுவார்கள்.

5.1. பணித் தகுதி அடிப்படையில் (Ex - Officio)

1. பங்குக் குரு
2. உதவிப் பங்குக் குரு
3. திருத்தொண்டர்
4. வேதியர்
5. பங்கிலுள்ள அனைத்துத் துறவற இல்லங்களின் தலைவர் / தலைவி

5.2. தேர்வு அடிப்படையில் (Elected)

1. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை, பேரவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் பெரும் பான்மையானதாக (மூன்றில் இரண்டு பகுதியாக) இருத்தல் வேண்டும்.
2. பங்கின் நில அமைப்புக்கு ஏற்பவும், பங்கு மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டும் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்படுவர்.
3. இந்தப் பிரதிநிதிகள் கிராமம், வட்டாரம், அன்பியம், தொகுதி ஆகியவற்றின் அடிப்படையில் அல்லது 100 அல்லது 50 பேருக்கு ஒருவர் என்னும் எண்ணிக்கை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.
4. இத்தேர்வு பதவி, படிப்பு, சமூக நிலை, சாதி போன்ற அடிப்படையில் அமையாமல், இறைமக்களின் பல வரங்களையும் நிலைகளையும் பிரதிபலிக்குமாறு அமைய வேண்டும். (உ–ம்: பெண்கள், இளைஞர், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், போதகர்கள்)
5. மறைமாவட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுப் பங்கில் செயல்படும் பல்வேறு பக்த சபைகள், இயக்கங்கள் தத்தம் பிரதிநிதிகளைப் பங்குப் பேரவைக்குத் தேர்ந்தெடுப்பர்.
6. பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.

5.3. நியமன அடிப்படையில் (Nominated)

ஒருசில துறைகளில் சிறப்புத் தகுதி பெற்றவர்களும், மற்ற முறைகளில் போதிய பிரதிநிதித்துவம் பெறாதவர்களும் பங்குப் பேரவைக்குப் பங்குத் தந்தையால் நியமிக்கப்படுவர்.

5.4. பணித் தகுதியின் அடிப்படையிலும், நியமன அடிப்படையிலும் உள்ள உறுப்பினரின் கூட்டு எண்ணிக்கை பேரவையின் மொத்த உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் இருக்கக் கூடாது.

பிரிவு 6 : உறுப்பினர் தகுதிகள்

6.1. பங்கின் எல்லைக்குள் அப்பங்கில் உறுப்பினராக வாழ்ந்துவரும் 18 வயது நிரம்பிய அனைத்துக் கத்தோலிக்கருக்கும் பேரவை உறுப்பினர் ஆகும் தகுதி உண்டு.

6.2. உறுப்பினர் ஒழுக்கமும், நேர்மையும், முன்மாதிரிகையும் உள்ளவராய், தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்படாதவராய், மக்கள் பணியில் ஈடுபடுபவராகவும் வழக்கமான திருவழிபாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்பவராகவும் இருக்க வேண்டும். (1 திமோத்தி 3:1−10)

6.3. தொகுதி வழியில் தேர்வு செய்யப்படக் கூடியவர் தொகுதி வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

6.4. தொகுதி வழியில் தேர்வு செய்யப்படுபவர் அத்தொகுதி மக்களோடு தொடர்பு கொண்டு பங்குப் பேரவைக்கும் அத்தொகுதி மக்களுக்கும் தொடர்பானவராகவும், அவர்கள் எண்ணங்களைப் பங்குப் பேரவையில் எடுத்துரைப்பவராகவும் இருக்க வேண்டும்.

6.5. பக்த சபை, இயக்கங்களிலிருந்து தேர்வு செய்யப்படும் உறுப்பினர்களும் குறைந்தது ஓராண்டாவது அவ்வியக்கக் கூட்டங்களுக்கு தொடர்ந்து வந்தவராகவும், தேர்வு செய்யப்பட்ட பின்னரும் இயக்கக் கூட்டங்களுக்குத் தொடர்ந்து வருவதுடன் இயக்கத்தின் எண்ணங்களைப் பங்குப் பேரவையில் எடுத்துரைத்துப் பங்குப் பேரவை முடிவுகளை அமைப்புக்களில் பகிர்ந்து கொள்பவராகவும் இருக்க வேண்டும்.

6.6. நியமன உறுப்பினர்கள் எந்தப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டார்களோ, அந்தப் பிரதிநிதித்துவத்தினரின் எண்ணங்களை அவர்களுடன் கலந்துரையாடி அறிந்து செயல்படுபவராக இருக்க வேண்டும்.

பிரிவு 7: வாக்காளர் தகுதிகள்

7.1. பங்கின் எல்லைக்குள் நிரந்தரமாகக் குடியேறும் எண்ணத்துடன் குறைந்தது ஆறு மாதங்களாக அங்கு வாழும் 18 வயது நிரம்பிய எல்லாக் கத்தோலிக்கருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு.

7.2. ஒரே சமயத்தில் இரு பங்குகளில் உறுப்பினராய் இருப்பவர்கள் பேரவைத் தேர்தலில் கலந்து கொள்ள முடியாது.

7.3. தொகுதி வாரியாகத் தயாரிக்கப்படும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றவருக்கே வாக்களிக்க உரிமை உண்டு.

பிரிவு 8 : தேர்தல் முறை

8.1. ஞாயிற்றுக் கிழமைகளில் அல்லது அனைவருக்கும் வசதியான ஒரு நாளில் பொதுக் குழுவிற்கான தேர்தல் நடைபெற வேண்டும்.

8.2. பங்கின் நில அமைப்புக்கு ஏற்பவும், பங்கின் மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டும் தொகுதி வாரியாகவோ, கிராம வாரியாகவோ அல்லது 100 அல்லது 50 பேருக்கு ஒருவர் என்னும் விகிதத்திலோ மேற்படி தகுதிகள் கொண்ட தனி வாக்காளர் பட்டியல் முதலில் தயாரிக்கப்பட வேண்டும்.

8.3. ஒவ்வொரு தொகுதி வாக்காளர் பட்டியலிலும் பெயர் உள்ள அனைவரும் தத்தம் தொகுதி வாக்காளர் பட்டியலில் இருந்து 18 வயதுக்கு மேல் உள்ள ஒருவரை இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்வு செய்ய வேண்டும்.

8.4. இரகசிய வாக்கெடுப்பு முறையில் பெயர் முன்மொழிதலும் வேட்பாளர்கள் நிறுத்தப்படுதலும் கூடாது.

8.5. சில வேளைகளில் அவ்வாறு அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெறுபவர் பேரவை உறுப்பினராக இருக்க விரும்பவில்லை என்றால், அடுத்து அதிக வாக்குகள் பெற்றவரை உறுப்பினராக அறிவிக்கலாம்.

8.6. அதிக வாக்குகள் ஒரே அளவில் இருவர் பெற்றிருந்தால் மீண்டும் தேர்தல் நடத்தலாம். அதன் பிறகும் அதே நிலை நீடித்தால் குலுக்கல் முறையில் ஒருவரைத் தேர்வு செய்யலாம்.

8.7. இந்த இரகசியத் தேர்தலை எல்லாப் பங்குகளிலும் நடத்தும் பொறுப்பை மறைமாவட்டப் பொதுநிலையினர் பணிக்குழுவுக்கு ஆயர் அளிக்கலாம் அல்லது வட்டார அளவில் தேர்தல் மேற்பார்வைக் குழு ஒன்றை ஆயர் நியமிக்கலாம். அல்லது பங்குத் தந்தையே பங்கு அளவில் வாக்காளர் பட்டியல் தயாரித்துத் தேர்தல் நடத்தும் பொறுப்புக்காகப் பங்கிலுள்ள பொதுநிலையினரில் மூவரைத் தேர்ந்தெடுத்து அவர்களின் துணையோடு பொதுச் சட்ட முறைக்கு உட்பட்டுத் தேர்தலை நடத்தலாம்.

8.8. பக்தசபை, இயக்கங்களில் 18 வயதுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒன்றுகூடித் தங்கள் அமைப்பில் உள்ள 18 வயது நிரம்பிய ஒருவரை இரகசிய வாக்கெடுப்பின் வழி மேற்படி முறையில் தேர்வு செய்யவேண்டும்.

8.9. உறுப்பினர் தேர்தலுக்காக எவரும் விளம்பரங்கள், பிரசாரங்கள் செய்வது தவறு.

8.10. முந்திய பங்குப் பேரவையின் பதவிக்காலம் முடிவதற்கு ஒரு வாரத்திற்கு முன் புதிய பங்குப் பேரவை உறுப்பினர் தேர்தல் நடத்தி இருக்க வேண்டும்.

8.11. புதிய பங்குப் பேரவை அமைக்கப்படக் கால தாமதம் ஏற்பட்டால் இடைக் காலத்தில் முந்திய பங்குப் பேரவையின் பணிக்காலத்தை நீடிக்க ஆயரின் அனுமதி பெறவேண்டும்.

8.12. பங்குப் பேரவை ஆயரால் கலைக்கப்பட்டாலோ, செயலிழந்தாலோ, பொதுநிலையினர் மூவரை பங்குத் தந்தையே நியமித்து அவர்களின் துணைகொண்டு மூன்று மாதங்களுக்குள் புதிய பங்குப் பேரவையை அமைக்க வேண்டும்.

(குறிப்பு : ஆரம்பக் கட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பு முறை கடினமாக இருக்கலாம். ஆனால் தகுதியான பிரதிநிதியை எவ்விதப் பயமும் இன்றி மக்கள் தேர்ந்தெடுக்க இந்த முறை சிறந்ததாகும். மக்களிடம் பிளவுகள் ஏற்படாமல் கவனம் செலுத்தல் வேண்டும்.)

பிரிவு 9: தேர்தல் முன் தயாரிப்பு

9.1. பங்கு மக்களுக்குப் பேரவையின் நோக்கம், பேரவை உறுப்பினரின் தகுதிகள், தேர்தல் முறை போன்றவை பற்றி தெளிவான பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும்.

9.2. தொகுதிகள் அமைக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் தனித்தனியாக வாக்காளர் பட்டியல் தயாரித்து, பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, விடுபட்டோர் பெயர்களைச் சேர்ப்பதற்குக் கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். இவை தேர்தல் தேதி அறிவிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் நடைபெற்றிருக்க வேண்டும்.

9.3. இரு வாரங்களுக்கு முன் ஞாயிறு திருப்பலியில் தேர்தல் நாள் அறிவிக்கப்பட வேண்டும்.

9.4. வாக்குச் சீட்டுகளைப் பயன்படுத்தும்போது தேர்தலுக்காக மறைமாவட்ட, மறைவட்ட அளவில் பொது வாக்குச் சீட்டுகள் தயாரிப்பது விரும்பத்தக்கது. அந்த வாக்குச் சீட்டுகளையே தேர்தல் பணிக்குழு பெற்றுத் தேர்தல் நடத்தலாம்.

9.5. உறுப்பினர் தேர்தலுக்குப் பின்னர், நிர்வாகிகள் தேர்தல் நடத்துவதற்கு முன், உறுப்பினர்களுக்கு நிர்வாகிகளின் கடமை, உறவு, பணி ஆற்றும் முறை, திட்டமிடல், தலைமைப் பண்புகள்

பற்றிய பயிற்சிகள் அளித்து, பின்னர் நியமனங்கள் தேர்தலை நடத்தலாம்.

பிரிவு 10 : உறுப்பினர் பணிக்காலம்

10.1. பங்குப் பேரவை உறுப்பினரின் பணிக்காலம் 3 ஆண்டுகளே.

10.2. பங்குக் குருவின் மாற்றம் இக்கால வரம்பைப் பாதிக்காது.

10.3. ஓர் உறுப்பினர் தொடர்ந்து இருமுறை (6 ஆண்டு) களுக்கு மேல் பங்குப் பேரவையின் உறுப்பினராக இருக்கக் கூடாது. மூன்று ஆண்டு இடைவெளிக்குப் பின் மறுபடியும் உறுப்பினராகலாம்.

10.4. சில சிறப்புக் காரணங்களால் ஆயர் பங்குப் பேரவையின் பணிக் கால அளவை 6 மாதங்களுக்கு மட்டும் நீடிக்கலாம்.

10.5. அப்படிச் செய்யும்போது மட்டும் உறுப்பினர் பணிக்காலமும் அதுவரை நீடிக்கும்.

10.6. ஓர் உறுப்பினர் தாமாகவோ, பதவி நீக்கப்பட்டோ தம்முடைய உறுப்பினர் பதவியை இழக்கும்போது, புதிதாகப் பதவி ஏற்கும் உறுப்பினரின் பதவிக்காலம், பதவி இழந்த உறுப்பினரின் எஞ்சிய பணிக்காலமே.

பிரிவு 11 : உறுப்பினர் பணி துறத்தல், பணி நீக்கம்

11.1. பங்குப் பேரவை உறுப்பினர் ஒருவர் தகுந்த காரணங்கள் இன்றியும் எழுத்து மூலம் முன் அறிவிப்பு இன்றியும் தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு வரவில்லை என்றால் தமது உறுப்பினர் பதவியை இழப்பார்.

11.2. பேரவை உறுப்பினர் பேரவையின் நோக்கங்களுக்கும் திருச்சபைச் சட்டங்களுக்கும் கிறிஸ்தவ நெறிமுறைகளுக்கும் முரணாக நடப்பதாகத் தெரிந்தால், பங்குத் தந்தை அவரிடம் எழுத்து மூலம் விளக்கம் கேட்டு, அதைப் பேரவையிடம் தெரிவித்து அவர்களின் ஆலோசனையுடன் அந்த உறுப்பினரைப் பங்குப் பேரவையிலிருந்து நீக்குவார்.

11.3. மேற்படி உறுப்பினர் தாம் நீக்கப்பட்டது குறித்து மேல் முறையீடு செய்ய விரும்பினால் மறைமாவட்ட ஆயருக்கு விண்ணப்பிக்கலாம்.

11.4. தாமாகப் பதவி விலக விரும்புபவர் எழுத்து மூலம் காரணத்தை எழுதி, விலகல் கடிதத்தைப் பங்குப் பேரவைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். அவர் அக்கடிதத்தைப் பேரவையில் வைத்து அவர்கள் ஆலோசனையோடு முடிவு செய்ய வேண்டும்.

11.5. பக்த சபைகளோ, இயக்கங்களோ செயல்படாது போனால் அவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், பேரவையில் தம் உறுப்பினர் நிலையை இழப்பர்.

11.6. தேர்ந்தெடுக்கப்பட்டவர் பதவி இழந்தால் பங்குப் பேரவையும், நியமன உறுப்பினர் பதவி இழந்தால் பேரவைத் தலைவரும் காலியான இடத்தை நிரப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிரிவு 12 : பொதுக்குழு

12.1 **அமைப்பு:**

1. பங்குப் பேரவை உறுப்பினர் அனைவரும் பொதுக்குழுவின் உறுப்பினர்கள்.
2. முறையான பொதுக்குழுக் கூட்டத்திற்குக் குறைந்த அளவு (Quorum) பொதுக்குழு உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வருகைதர வேண்டும்.
3. பேரவைத் தலைவரே பொதுக்குழுவின் தலைவர்.

12.1. **கூட்டம்:**

1. சாதாரணக் கூட்டங்கள் : பொதுக்குழுக் கூட்டம் குறைந்தது 3 மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும்.
2. தலைவரின் இசைவுடன் செயலர் உறுப்பினருக்கு 21 நாட்களுக்கு முன் கூட்டத்திற்கான அழைப்பு விடுக்க வேண்டும்.
3. கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டுமென விரும்பும் கருத்துக் குறிப்புகள் கூட்ட நாளுக்கு 15 நாட்களுக்கு முன் தலைவருக்கு வந்து சேர வேண்டும்.
4. கூட்டத்தின் விவாதப் பொருட்கள் குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்பாவது உறுப்பினர்களுக்கு நிச்சயம் தெரியப்படுத்தப்பட வேண்டும்.
5. அவசரக் கூட்டத்தைக் கூட்டப் பேரவைத் தலைவருக்கு மட்டுமே உரிமை உண்டு. அவர் தேவைக்கேற்பவோ, பெரும்பான்மை உறுப்பினரின் எழுத்து வடிவ வேண்டுகோளின்படியோ அவசரக் கூட்டத்தைக் கூட்டலாம்.
6. அவசரக் கூட்டத்திற்கும் அழைப்புக்கும் இடையில் குறைந்தது ஒரு நாள் இருக்க வேண்டும்.
7. அவசரக் கூட்டத்தில் விவாதிக்கும் பொருளைத் தலைவர் நிர்ணயிப்பதாக இருந்தாலும் இதர நிர்வாகிகளுடனும் அவர் கலந்தாலோசிக்க வேண்டும்.

பிரிவு 13 : செயற்குழு

1. பேரவைத்தலைவர், துணைத் தலைவர், செயலர், துணைச் செயலர், மற்றும் பொதுக்குழுவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட

உறுப்பினர் நால்வர், பங்கு நிதிக்குழுச் செயலர் இவர்களைக் கொண்டு செயற்குழு அமைக்கப்படும். (உறுப்பினர் குறைந்தது 4 பேர்).

2. இந்த எண்ணிக்கை பங்கின் தற்நிலைக்கேற்பவும், பொதுக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கைக்கேற்பவும் கூடுதலாக அமையலாம்.
3. பேரவையின் தலைவர் செயற்குழுவின் தலைவர் ஆவார்.
4. நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படும்போது வருகை தந்திருக்கும் பொதுக்குழு உறுப்பினரின் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளை (absolute majority)அவர்கள் பெற வேண்டும்.
5. மற்றச் செயற்குழு உறுப்பினர் சாதாரணப் பெரும்பான்மை வாக்குகள் (simple majority) பெற்றால் போதுமானது.
6. பங்கு நிதிக்குழுச் செயலர் பணித் தகுதி அடிப்படையில் செயற்குழு உறுப்பினராக இருப்பார்.
7. செயற்குழு உறுப்பினர் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள். இவர்கள் மீண்டும் மூன்று ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

13.2. கூட்டம்

1. செயற்குழுக் கூட்டம் மாதம் ஒருமுறை நடைபெறும்.
2. தலைவர் இசைவுடன் உறுப்பினர்களுக்குச் செயலர் ஏழு நாட்களுக்கு முன் கூட்டத்திற்கான அழைப்பு விடுக்க வேண்டும்.
3. கூட்டத்தின் விவாதப் பொருட்கள் மூன்று நாட்களுக்கு முன்பாவது உறுப்பினர்களுக்கு நிச்சயம் தெரிவிக்கப்பட வேண்டும்.
4. ஒவ்வொரு பொதுக்குழுக் கூட்டத்திற்கும் முன்னால் செயற்குழு கூடி, பொதுக்குழுக் கூட்ட ஆலோசனைப் பொருள், கூட்டச் செயல்முறைபற்றித் தெளிவான முடிவுகள் எடுக்க வேண்டும்.
5. உட்குழுக்களின் செயல்பாடுகள் பற்றியும் செயற்குழு முடிவெடுக்கும்.
6. பேரவையைக் கூட்ட முடியாத அவசரக் காலச் தற்நிலையில் செயற்குழு கூடி முடிவுகள் எடுக்கலாம். அடுத்த பொதுக்குழுக் கூட்டத்தில் இவை அறிவிக்கப்பட வேண்டும்.
7. முறையான செயற்குழுக் கூட்டத்திற்குக் குறைந்த அளவு (கோரம்) செயற்குழு உறுப்பினரில் பாதிப்பேர் (50%) வருகை தரவேண்டும்.

பிரிவு 14: பேரவையின் உட்குழுக்கள்

14.1. பங்கு முழு வளர்ச்சி அடைய அது பல்வேறு துறைகளில் முன்னேற்றம் காண வேண்டும். எனவே பல்வேறு துறைகளில்

திறமையும் ஆர்வமும் ஈடுபாடும் உடைய பொதுநிலையினரைத் தேர்ந்து, அவர்கள் தத்தம் துறைகளில் பெற்றுள்ள திறமைகளையும் அனுபவங்களையும் பங்கின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வழிவகுக்கும் வகையில் பங்குப் பேரவை பல உட்குழுக்களை அமைக்கும்.

14.2. அத்துடன் எல்லாப் பணிகளும் பொறுப்புக்களும் ஓரிடத்திலோ, ஒருசிலரை நம்பியோ அல்லாமல் அவற்றைப் பன்முகப்படுத்திச் செயல்படவும், பல்வேறு நல்ல தலைவர்கள் பங்கில் உருவாகவும் இக்குழுக்கள் மிகவும் உதவும்.

14.3. இக்குழுக்களில் பேரவை உறுப்பினர் மட்டுமன்றி தகுதி வாய்ந்த மற்றவர்களும் உறுப்பினராக நியமிக்கப்படலாம்.

14.4. பங்குத் தந்தையோடு இணைந்து மேய்ப்புப்பணித் துறையில் பயன்தரும் பல்வேறு திட்டங்களைத் திறம்படச் செய்து முடிக்கத் திருவழிபாட்டுக் குழு, கல்விக் குழு, சமாதானக் குழு, சமூக மேம்பாட்டுக் குழு, இளைஞர் பணிக் குழு, கலைக் குழு, கட்டடக் குழு போன்ற பல குழுக்களை அமைத்துச் செயல்பட வேண்டும்.

எடுத்துக்காட்டாக:

திருவழிபாட்டுக்குழு: திருப்பலி, வழிபாடுகள், செபக்குழுக்கள் இவற்றிற்கான பாடல்கள், தியானம், திருயாத்திரை, கிறிஸ்து பிறப்பு, உயிர்ப்பு, பொங்கல், தீபாவளி போன்ற விழாக்கள், பங்கின் பிற முக்கிய விழாக்கள் போன்றவற்றைத் திட்டமிட்டு, நன்கு தயாரித்து அனைவருக்கும் பயனுள்ள வகையில் வழிபாடுகளில் பங்குகொள்ள உதவலாம்.

வார்த்தை / நற்செய்திக்குழு: விவிலிய ஆய்வு, மறைக்கல்வி, பல்சமய உரையாடல் போன்றவற்றை ஏற்பாடு செய்து வழிநடத்தலாம்; படிப்பகம், நற்செய்திக் கூட்டங்கள் நடத்தலாம்; தொடர்புச் சாதனங்கள் (நாடகம், வானொலி, தொலைக்காட்சி) போன்றவற்றைப் பயன்படுத்தும் வழியைக் கற்றுத் தரலாம்; நற்செய்தி அறிவிப்புக்குப் பயன்படுத்த வழிசெய்யலாம்.

சமூக மேம்பாட்டு/ நற்பணிக் குழு: குடும்ப நலம், மக்களின் சமூக பொருளாதார அரசியல் கலாச்சார மேம்பாடு, வறுமை ஒழிப்பு, நோயுற்றார் பராமரிப்பு, விதவைகள் நலவாழ்வு, மறுவாழ்வு, மனித நல்லிணக்கம், அனைத்திற்கும் மேலாகச் சமத்துவம், சமூக நீதி போன்றவற்றிற்கான திட்டங்கள் தீட்டிச் செயல்படலாம்.

மேலே குறிப்பிட்டவை போன்ற முக்கியக் குழுக்களை அமைத்துப் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

14.5. பங்கின் தேவைகளுக்கேற்ப வேறு பல குழுக்களையும் ஏற்படுத்திக் கொள்ளலாம்,

14.6. பங்குத் தந்தையே இக்குழுக்கள் அனைத்துக்கும் தலைவராக இருப்பார்.

14.7. பங்குப் பேரவையின் கீழ் இயங்கும் குழுக்களின் பணிக்காலம் பங்குப் பேரவையின் பணிக்காலமே.

14.8. இக்குழுக்களின் உறுப்பினர்கள் பங்குப் பேரவையால் தேர்வு செய்யப்பட வேண்டும். மக்களின் தேவை, பணிப்பொறுப்பு ஆகியவற்றை மனதில் கொண்டு குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒவ்வொரு பங்கும் நிர்ணயித்துக் கொள்ளலாம்.

14.9. ஒவ்வொரு குழு உறுப்பினரும் கூடித் தங்களுக்குள் ஒரு குழுச் செயலரைத் தேர்வு செய்ய வேண்டும்.

14.10 அந்தந்தக் குழுச் செயலரே பங்குத் தந்தையின் தலைமையில் அந்தந்தக் குழுவினை வழிநடத்தி, அறிக்கைகள் தயார் செய்து, ஒவ்வொரு மாதமும் பங்குப் பேரவையில் சமர்ப்பிக்க வேண்டும்.

14.11 குழுக்கள் தீட்டும் செயல்திட்டங்கள் பேரவையின் ஒப்புதலோடு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

பிரிவு 15 : பேரவையின் பரிந்துரைகள், நடைமுறைகள்

15.1. பங்குப் பேரவையிலும் பிற குழுக்களிலும் பரிந்துரைகள் நிறைவேற, வருகை தந்திருப்போரில் பாதிக்கு (50%) மேற்பட்டோருடைய ஆதரவு பெற வேண்டும். பங்குத் தந்தையின் ஒப்புதல் பெற்றே பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

15.2. வாக்கெடுப்புகள் அனைத்தும் இரகசியமாகவே நடைபெற வேண்டும்.

15.3. முன்பே குறிப்பிட்டபடி, பங்குப் பேரவையின் பரிந்துரைகளைச் செயல்படுத்தும் பொறுப்பு உறுப்பினரையே சாரும்.

15.4. பேரவை கொடுக்கும் பரிந்துரைகள் கிறிஸ்தவ மதிப்பீடுகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், அனாதைகள் இவர்களின் நலன்களை முன் வைத்து எடுக்கப்பட வேண்டும்.

15.5. மிக முக்கிய காரியங்களில் எடுக்கப்படும் பரிந்துரைகள் ஆயரின் ஒப்புதல் பெற வேண்டும். எடுத்துக்காட்டாக ஆலயம் புதுப்பித்தல், மாற்றிக் கட்டுதல், புதுக் கட்டடங்கள் எழுப்புதல், பங்கின் உடைமைகளை உரிமை மாற்றம் செய்தல், கடன் வாங்குதல் போன்றவை.

15.6. ஏழைகளுக்கென்றும், கல்வி வளர்ச்சிக்கென்றும், பங்கின் ஏனைய வளர்ச்சிப் பணிகளுக்கென்றும், சேமிப்புக்கென்றும் பங்கின் மொத்த வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டுப் (%)

பணத்தைத் தனித்தனியாக ஒதுக்கி வங்கியில் சேமிக்கச் செய்ய வேண்டும்.

15.7. பரிந்துரைகள் ஏட்டளவில் நின்றுவிடாமல் செயல்படுத்தப்பட வேண்டும். இதில் கூட்டுப் பொறுப்பும் ஈடுபாடும் அனைவருக்கும் உண்டு.

பிரிவு 16 : பேரவை நிர்வாகிகள் (பொறுப்பாளர்கள்)

16.1. **பொது :**

1. பேரவையின் தலைவர், துணைத் தலைவர், செயலர், துணைச் செயலர் ஆகிய நால்வரும் பேரவையின் நிர்வாகிகள் ஆவர்.
2. தலைவர் நீங்கலாக மற்ற நிர்வாகிகள் அனைவரும் மறைமுக வாக்கெடுப்பின் வழியாகப் பொதுக்குழுவால் தேர்வு செய்யப்படுவர்.
3. ஒவ்வொரு நிர்வாகியும் பேரவையில் உள்ள மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் பாதிக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் வாக்குகள் பெற்றால்தான் தேர்வு செய்யப்படுவார்.
4. பங்கு மக்கள் அனைவருக்கும் பங்குத் தந்தை பொதுவானவர் ஆனதால், ஒருவரையும் சாராதவர் என்பதை எண்பிக்க நிர்வாகிகள் தேர்தலில் அவர் வாக்களிக்கக் கூடாது.
5. பங்குப் பேரவையின் நிர்வாகிகளுள் அதன் தலைவராகிய பங்குத் தந்தை மட்டுமே நிலையாகப் பணிப் பொறுப்பு வகிப்பவர். ஏனையோர் ஆயரின் ஒப்புதல் பெற்ற நாளிலிருந்து 3 ஆண்டுகள் பணிப் பொறுப்பில் இருப்பர். மீண்டும் ஒரு முறை அவர்கள் நிர்வாகப் பணிப் பொறுப்புக்குத் தேர்வு செய்யப்படலாம்.
6. பங்கில் புதிய தலைமைகள் உருவாக வழி பிறக்கவும், பலருக்குப் பரவலாக வாய்ப்புக் கிடைக்கவும், ஒரு சிலரின் ஆதிக்கம் பங்கில் எப்போதும் இருப்பதைத் தவிர்த்து ஓர் உயிரோட்டமுள்ள மக்களாட்சி வழிமுறை ஏற்படவும், எக்காரணம் கொண்டும் யாரும் தொடர்ந்து இரண்டு முறைக்கு மேல் நிர்வாகப் பொறுப்பு வகித்தல் கூடாது.

16.2. **தலைவர் :**

1. பங்குப் பேரவையின் தலைவர் பங்குத் தந்தையே ஆவார். பங்கு நிர்வாகத்தின் தலைமையும் பொறுப்பும் இவரையே சாரும்.
2. பங்குத் தந்தை பணித் தகுதி அடிப்படையில் பேரவைத் தலைவராக விளங்குகிறார். இவரே பேரவைக் கூட்டங்களையும் செயற்குழு, நிர்வாகக் குழு, உட்குழுக்கள் கூட்டங்களையும் தலைமை தாங்கி நடத்துவார்.

3. பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்களில் சம பலத்தால் தீர்மானங்கள் எடுக்க முடியாத நிலையில் தீர்மானங்களின் தேவைகளை விளக்கி அவர்கள் முடிவெடுக்கும் நிலைக்குத் தூண்டுவார்.

4. மறைமாவட்ட, மறைவட்டத் தேர்தல் பணிக்குழு இல்லாதபோது தாமே மூவரைத் தேர்தல் பணிக்குழுக்களுக்குத் தேர்வு செய்து, அவர்களைக் கொண்டு பங்குப் பேரவைத் தேர்தல், நிர்வாகிகள் தேர்தல் போன்றவற்றை நடத்துவார்.

16.3. துணைத் தலைவர் :

1. துணைத் தலைவர் பொதுநிலையினரில் ஒருவராக இருக்க வேண்டும். அவர் தலைவருடன் இணைந்து பேரவையின் அனைத்துப் பணிகளையும் முன்னின்று வழி நடத்துவார்.

2. தலைவர் இல்லாதபோது பேரவைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்துவார்.

16.4. செயலர் :

1. பேரவைத் தலைவரின் இசைவுடன் கூட்ட அறிவிப்புக்களை உறுப்பினருக்கு அனுப்புவது இவரது கடமை.

2. தலைவரோடு இணைந்து கூட்ட விவாதப் பொருளைத் தயார் செய்வதும் இவரது கடமை.

3. கூட்டத்தின் செயல்களையும், பரிந்துரைகளையும் குறிப்பெடுத்து, அடுத்த கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பித்து ஒப்புதல் பெறுவது இவரது முக்கியக் கடமை.

4. பங்குப் பேரவை சார்ந்த எல்லாக் கடிதத் தொடர்புகளையும் பேரவைத் தலைவரின் இசைவுடன் செயலரே செய்ய வேண்டும்.

5. கடிதங்களின் நகல்கள், அறிக்கைப் புத்தகங்கள், வருகைப் பதிவேடு ஆகியவற்றைப் பாதுகாப்பது செயலரின் பொறுப்பாகும்.

6. கடிதங்களில் தலைவர், செயலர் ஆகிய இருவரின் கையொப்பமும் இருக்க வேண்டும். இருவர் கையெழுத்தும் இல்லாத கடிதங்கள் பேரவையின் கடிதங்களாகக் கருதப்படமாட்டா.

7. பேரவை, செயற்குழு இவற்றின் உறுப்பினர்களின் வருகையைப் பதிவு செய்ய வேண்டியது இவரது கடமை.

8. தலைவரின் ஒப்புதலுடன் பேரவையின் பரிந்துரைகள், பேரவை சார்ந்த அறிவிப்புகள் ஆகியவற்றை ஆலயத்தில் வாசிக்கலாம்.

9. பேரவையின் அலுவலகக் கோப்பு இரண்டு பிரதிகள் இருக்க வேண்டும். இவற்றுள் ஒன்று தலைவரிடமும், மற்றொன்று செயலரிடமும் இருக்க வேண்டும்.

10. பணித் தகுதி அடிப்படையில் பேரவையின் செயலர் பங்கு நிதிக்குழுவின் உறுப்பினராக இருப்பார். நிதிக்குழுவின் அனைத்துக் கூட்டங்களிலும் பங்கேற்பார்.

16.5. துணைச் செயலர்:

இவர், செயலருக்கு அவரது அனைத்துப் பணிகளிலும் உதவ வேண்டியவர். செயலர் இல்லாத வேளைகளில் அவரது அனைத்துப் பணிகளையும் இவரே ஏற்று நடத்துவார். அவர் இருக்கும்போது அவரது இசைவுடன் அவரது பணிகளைப் பகிர்ந்தும் செய்யலாம்.

பிரிவு 17 : உறுப்பினர் பொதுக் கடமைகள்

17.1. உறுப்பினர் பிறருக்கு முன்மாதிரியாக வாழ்ந்து கிறிஸ்துவ அன்பு, பணிவு இவற்றுடன் அனைத்துத் துறைகளிலும் பங்கு முன்னேற்றம் அடையத் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளைப் பொறுப்புடன் நிறைவு செய்து தங்களுடைய ஆற்றலையும், திறமைகளையும் பயன்படுத்திப் பணிபுரிய வேண்டும்.

17.2. பேரவைக் கூட்டங்களில் தவறாது பங்கேற்பது தங்கள் தலையாய கடமை என உணர்ந்து கூட்டங்களுக்குத் தவறாது வருகை தரவேண்டும்.

17.3. தவிர்க்க முடியாத காரணத்தால் கூட்டத்திற்கு வர இயலவில்லையானால், காரணத்தை எழுத்து வடிவில் கூட்டத்திற்கு முன் செயலருக்குத் தெரியப்படுத்த வேண்டும். கூட்டத்தின்போது செயலர் உறுப்பினருக்கு இதைத் தெரிவிக்க வேண்டும்.

17.4. தங்களுடைய அனைத்துப் பணிகளிலும் ஏழைகள், நலிந்தோர், ஒடுக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அப்போதுதான் நமது பணி கிறிஸ்துவின் பணியாகும்.

17.5. உறுப்பினர் பங்கு மக்களுடன் நெருங்கிய உறவு கொண்டு செயல்பட வேண்டும். பேரவை உறுப்பினர் ஒவ்வொருவரும் தாங்கள் யாருடைய பிரதிநிதியாகப் பேரவையில் இடம் பெற்றார்களோ அவர்களுடன் ஒவ்வொரு பேரவைக் கூட்டத்திற்கு முன்னும் கலந்துரையாடி அவர்களுடைய உணர்வுகளைப் பேரவையில் பிரதிபலிக்க வேண்டும். மாறாகத் தங்கள் சொந்தக் கருத்துக்களை மட்டும் பகிர்ந்து கொள்ளல் முறையாகாது.

17.6. பேரவை முடிவுகளைத் தான் சார்ந்துள்ள குழுவினரிடம் விளக்கும் கடமையும் இவருக்குண்டு. சுருங்கச் சொன்னால் இவர் பங்குப் பேரவைக்கும், தம்மைத் தேர்வு செய்து அனுப்பிய அமைப்புக்கும் தொகுதிக்கும் தொடர்பாளர் என்பதை நினைவில் கொண்டு செயல்பட வேண்டும்.

17.7. இவர்கள் பங்குப் பேரவைக் கூட்டத்தில் கடமை உணர்வுடனும் கண்ணியத்தோடும், பிறரை மதித்தும், பிறர் கருத்துக்குச் செவிமடுத்தும், திறந்த மனத்துடனும் பொதுநலக் கண்ணோட்டத்துடனும் முடிவுகள் எடுக்க உதவ வேண்டும்.

17.8. பேரவைக் கூட்ட முடிவுகள் பரிந்துரைகள், செயல்முறைகள் பற்றிப் பேரவைக்கு வெளியே விமர்சித்தல் கூடாது.

17.9. பங்குப் பேரவையின் ஒப்புதல் இன்றிப் பேரவையின் உறுப்பினர் எவரும் எந்த அறிக்கையையும் தனிநபருக்கோ, பத்திரிகைகளுக்கோ, வேறு தொடர்பு நிறுவனங்களுக்கோ கொடுக்கக் கூடாது.

17.10. எழுத்து வடிவில் ஆயரின் அனுமதி பெறாமல் பேரவையின் எந்த நடவடிக்கை குறித்தும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது. இதை மீறுவோர் ஆயரால் பங்குப் பேரவையிலிருந்து நீக்கப்படுவோர். அவர்கள்மீது ஏனைய தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

17.11. பங்குப் பேரவை அமைக்கும் பல்வேறு பணிக்குழுக்களில் தங்களை இணைத்துக் கொண்டு, தங்கள் தனித்திறமைகளைப் பங்கு நலனுக்காக ஒவ்வொரு உறுப்பினரும் செலவிடத் தயாராக இருக்க வேண்டும்.

பிரிவு 18 : நிர்வாகிகளின் பொதுக் கடமைகள்

18.1. பங்குப் பேரவையைச் சார்ந்த கோப்புகள், ஏடுகள், பொருட்கள் போன்றவற்றை எக்காரணம் கொண்டும் தங்கள் இல்லங்களுக்குக் கொண்டு செல்லக் கூடாது.

18.2. எந்த ஆவணத்தையும் தலைவரின் முன் அனுமதியின்றி நகல் (Xerox போன்றவை) எடுக்கக் கூடாது.

18.3. ஆயரின் எழுத்துவடிவ அனுமதி இன்றிப் பேரவையைச் சார்ந்த பொருட்களையும் ஆவணங்களையும் வேறு நபர்களிடம் கொடுக்கவோ, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவோ கூடாது.

18.4. நிர்வாகிகள் அனைவரும் இணைந்து, நட்புறவோடும் கூட்டுப் பொறுப்போடும் பங்குப் பணியில் ஈடுபட வேண்டும். சொந்த நலனுக்காகவும் பெருமைக்காகவும் செயல்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

18.5. பங்குத் தந்தை நீங்கலாக ஏனைய நிர்வாகிகளின் பணிக்காலம் பங்குப் பேரவையின் பணிக்காலமாகிய 3 ஆண்டுகளே. நிர்வாகிகளில் யாரேனும் மூன்றாண்டுகளுக்குள் பதவி விலகினாலோ, விலக்கப்பட்டாலோ புதிதாக அப்பொறுப்பினை ஏற்பவரின் பணிக்காலம் அப்பேரவையின் எஞ்சிய பணிக்கால அளவே.

18.6. பணி விலகிய அல்லது விலக்கப்பட்ட அல்லது பணிக்காலம் முடிவுற்ற நிர்வாகிகள் தங்கள் பணிப் பொறுப்பின்போது தங்களிடம் இருக்கும் பேரவைப் பொருட்கள், கோப்புக்கள், பதிவேடுகள் போன்ற யாவற்றையும் புதிய நிர்வாகியிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும். ஒப்படைத்தவற்றிற்கான ஆதார நகல் ஒன்று பேரவைக்குக் கொடுக்க வேண்டும்.

18.7. நிர்வாகிகள் அதிகாரம் செலுத்துபவராய் இல்லாமல் பங்கின் அனைத்துப் பணிகளைச் செய்பவர்களுக்கும், செய்யும் குழுக்களுக்கும் ஆலோசனை வழங்கி வழிகாட்டுபவர்களாக விளங்க வேண்டும்.

*பிரிவு **19 : உறுப்பினர் பயிற்சி***

19.1 பேரவை உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டதும், நிர்வாகிகளைத் தேர்வு செய்வதற்குமுன், பேரவை உறுப்பினர் அனைவருக்கும் உறுப்பினர் கடமைகள் பொறுப்புக்கள் பற்றியும், உறவு பற்றியும், நிர்வாகிகள் பொறுப்பு கடமை பணி பற்றியும் தெளிவான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

19.2. மறைமாவட்ட அளவில் பயிற்சி பெற்ற மறைமாவட்டப் பொதுநிலையினர் கருத்தாளர் குழுவின் துணையோடு இத்தகைய பயிற்சிகளை நடத்தப் பங்குத் தந்தை ஏற்பாடு செய்யவேண்டும்.

19.3. வருடத்திற்கு இரு முறையாவது பேரவை மற்றும் உட்குழுக்களின் உறுப்பினர்களுக்குத் திருமறை சம்பந்தமான பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதில் பங்குத் தந்தைக்கு முக்கிய பொறுப்பு உண்டு.

19.4. இத்தகைய பயிற்சியில் எல்லா உறுப்பினர்களும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். அதற்காக அவர்களுக்கு வசதியான ஒரு நாளை முன் கூட்டியே ஆலோசித்து முடிவெடுப்பது நலம்.

பிரிவு 20 : பேரவை அங்கீகாரமும் கலைப்பும்

20.1. பேரவை நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டுப் பேரவை அமைக்கப்பட்டவுடன் பேரவைத் தலைவர் அப்பேரவைக்கு எழுத்து வடிவில் ஆயரின் அங்கீகாரத்தை இரு வாரங்களில் பெறவேண்டும். அப்படி அங்கீகாரம் பெறாத பேரவையின் செயல்பாடுகள் செல்லாதவையாகக் கருதப்படும்.

20.2. அத்தகைய அங்கீகாரம் பெற மறைமாவட்ட அளவில் ஒரு விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட்டு, அதனைப் பயன்படுத்தலாம்.

20.3. பங்குத் தந்தை மாறினாலும், மாற்றத்தினால் ஏற்படும் தற்காலிக இடைவெளி ஏற்பட்டாலும் பங்குப் பேரவை தொடர்ந்து செயல்படும்.

20.4. பேரவையை ஆயரே அங்கீரிப்பதால் அதனைக் கலைக்கும் அதிகாரம் ஆயருக்கே உண்டு.

20.5. பேரவையோ அதன் உட்குழுக்களோ பங்கின் நலன்களுக்கும், திருமறை விதிகளுக்கும், ஒழுங்குகளுக்கும், ஆயரின் ஆணைகளுக்கும் முரண்பாடாகச் செயல்படுவதாகத் தெரிந்தால் அவற்றைக் கலைக்கும் அதிகாரம் ஆயருக்கு உண்டு. இதை ஆயர் எழுத்து வடிவில் தெரிவிக்க வேண்டும்.

20.6. பங்கின் செயல்பாடு ஆயரால் நிறுத்தி வைக்கப்படும்போது பங்குப் பேரவை செயலிழந்துவிடும்.

20.7. பேரவை கலைக்கப்பட்டுப் புதிய பேரவை அமைக்கும் இடைக்காலத்தில் (6 மாதத்திற்குள்) பங்கு நிதிக்குழுவின் அல்லது பங்குத் தந்தையால் நியமிக்கப்பட்ட 3 பேர் அடங்கிய குழுவின் துணையுடன் பங்குத் தந்தை பங்கினை நிர்வகித்து வழி நடத்தலாம்.

பிரிவு 21 : பேரவைச் செயல்பாட்டுக் கண்காணிப்பு

21.1. பங்குப் பேரவையை உருவாக்கி, வலுப்படுத்தி, வழிநடத்தும் பொறுப்பை ஆயர் மறைமாவட்டப் பொதுநிலையினர்

பணிக்குழுவிடம் ஒப்படைக்கலாம். அல்லது இதற்காகப் புதிய அமைப்பை ஏற்படுத்தலாம் (பிரிவு – 22: பேரவை விதி விளக்கம்).

22.2. பேரவை அல்லது பிற குழுக்களின் விதிகளைப் பற்றிய அதிகாரப் பூர்வமான விளக்கம் அளிப்பவர் ஆயரே. அவர் இந்தப் பணியை பொதுநிலையினர் பணிக்குழுவிடமோ அல்லது இதற்காக உள்ள அமைப்பிடமோ ஒப்படைக்கலாம்.

22.3. பேரவை விதி விளக்கம் பற்றிய எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஆயரின் முடிவே இறுதியானது.

பிரிவு 23 : விதி மாற்றம்

23.1. பங்குப் பேரவை மற்றும் குழுக்களுக்கான விதிகளை வகுத்து அளிப்பவர் மறைமாவட்ட ஆயரே. எனவே தேவை ஏற்படும்போது இவ்விதிகளில் மாற்றம் கொண்டு வருவதும் புதிய விதிகளை வழங்குவதும் மறைமாவட்ட ஆயரின் பணிப் பொறுப்பாகும்.

பிரிவு 24 : ஆயரின் ஒப்புதல் ஆணையும் பிரகடனமும்

ஆயர் கீழ்க்கண்டவாறு பேரவையைப் பிரகடனம் செய்யலாம் :

24. மறைமாவட்டக் குருக்கள் மன்றத்தைக் கலந்தாலோசித்தபின் மேலே கண்ட பங்கு மேய்ப்புப் பணிப் பேரவை விதிமுறைகளை இந்த ஆணை மூலம் அங்கீகரித்துப் பிரகடனம் செய்கிறேன். அனைவரும் இதை ஏற்றுக் கடைப்பிடிக்க அறிக்கை விடுக்கின்றேன்.

இந்த ஆணை எட்டிய . . . . (எத்தனை நாட்கள்)க்குள் எல்லாப் பங்குத் தளங்களிலும் இவ்விதிமுறைப்படி பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைகள் அமைத்திட வேண்டுமெனப் பங்குத் தந்தையர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த ஆணை . . . . (ஊர்)ல்
. . . . ஆம் ஆண்டு . . . .
திங்கள் . . . . நாள் பிரகடனப்படுத்தப்படுகிறது.

மறைமாவட்டச் செயலகப் பொறுப்பாளர்.　　　　மறைமாவட்ட ஆயர்.

பங்கு நிதிக்குழு

பங்கு நிதிக்குழு

I அறிமுகம்

திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் 1983–ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 27–ஆம் தேதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட திருச்சபைச் சட்டத் தொகுப்பு ஒவ்வொரு பங்கிலும் நிதிக் குழு ஒன்று கட்டாயம் நிறுவப்பட வேண்டும் என ஆணையிடுகிறது.

நமது பங்குகளில் நிதிக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானதே. பொது நன்மையை முன்னிட்டுக் காணிக்கையாக, நன்கொடையாக, தானதருமமாக, வரியாக, பங்குப் பராமரிப்பு நிதியாகப் பக்தி விசுவாச நம்பிக்கையோடு கொடுக்கப்படும் பணமும், கோயிலின் உடைமைகளிலிருந்து கிடைக்கும் வருமானமும் மக்களின் பொதுநன்மைக்காக முறைப்படித் திட்டமிடப்பட்டுப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகத்தான் நிதிக் குழு கட்டாயம் அமைக்கப்பட்டுச் செயல்பட வேண்டும் எனத் திருச்சபை ஆணையிடுகிறது. மேலும், பங்கின் வளர்ச்சிக்காகத் தேவைப்படும் நிதியைத் திரட்டவும், தரப்பட்ட நிதியை முறையாகப் பயன்படுத்தவும், பங்குப் பேரவை தயாரிக்கும் திட்டங்களுக்குத் தேவையான நிதியை வழங்கவும் நிதிக் குழு இன்றியமையாதது.

II பங்குப் பேரவை, பங்கு நிதிக்குழு உறவு

1. **பொது**

1.1. திருச்சபைச் சட்டப்படி பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையும் பங்கு நிதிக் குழுவும் பங்கு மக்களின் நலனுக்காக மறைமாவட்ட ஆயரின் ஆணையோடும் அங்கீகாரத்தோடும் ஏற்படுத்தப்பட்ட இரண்டு அமைப்புக்கள்.

1.2. பங்குக்குத் தேவையான நிதி ஆதாரங்களை உருவாக்குவதும், ஒதுக்குவதும் சரியான முறையில் நிர்வாகம் செய்வதும் நிதிக் குழுவின் பணி. எனவே, இந்த இரு அமைப்புகளும் போட்டியின்றி இணைந்து பணியாற்ற வேண்டும்.

1.3. இந்தியாவில் பல்வேறு இடங்களில் பங்கு நிதிக்குழு, பங்குப் பேரவையின் ஓர் உட்குழுவாக ஆயரின் விதிப்படி அமைக்கப்பட்டுள்ளது.

2. தமிழகச் சூழலில்

தமிழகச் சூழ்நிலையையும் நம் மக்களின் நடைமுறைச் செயல்பாட்டுத் தன்மைகளையும் மனதில் கொண்டு, இரண்டு

அமைப்புக்களும் இணைந்து செயல்பட கீழ்க்கண்ட முறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன:

2.1. பங்கு நிதிக் குழு, பங்குப் பேரவையின் ஒரு குழு. இது கட்டாயம் அமைக்கப்பட வேண்டும். (கட்டாயக் குழு)

2.2. நிதிக் குழுவின் உறுப்பினர்கள் பங்குப் பேரவையால் தெரிவு செய்யப்படுவர்.

2.3. நிதிக்குழு உறுப்பினருள் குறைந்தது 2/3 பகுதியினர் பங்குப் பேரவை உறுப்பினரிலிருந்தும், மற்றவர்கள் உறுப்பினர் அல்லாதவரிலிருந்தும் தெரிவு செய்யப்படுவர்.

2.4. இரண்டு அமைப்புக்களும் ஒன்றாகச் செயல்படும் கண்ணோட்டத்தில்தான் இரண்டு அமைப்புக்களுக்கும் பங்குத் தந்தையே தலைவராக இருக்கிறார்.

2.5. இரண்டு அமைப்புக்களுக்கும் தேவையான தகவல்கள், விளக்கங்கள் சரியான முறையில் பகிர்வு ஏற்படவும், நன்கு புரிந்து கொள்ளும் நிலை ஏற்படவும், பங்குப் பேரவையின் செயலர், பணி அடிப்படையில் பங்கு நிதிக் குழுவின் உறுப்பினராகவும், பங்கு நிதிக்குழுவின் செயலர், பணி அடிப்படையில் பங்குப் பேரவையின் செயற்குழு உறுப்பினராகவும் இருப்பார்.

2.6. – ஆண்டுக்கு 2 முறையாவது பங்குப் பேரவையும் நிதிக்குழுவும் இணைந்த கூட்டம் நடைபெற வேண்டும்.

– இதில் ஒரு கூட்டம் ஆண்டுச் செயல்திட்டம், வரவு செலவுத் திட்டம், நிதி ஒதுக்கீடு பற்றிய கூட்டமாகவும்

– அடுத்த கூட்டம் ஆண்டின் செயல்பாடுகள் அறிக்கையும், நிதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்படும் கூட்டமாகவும் இருக்க வேண்டும்.

– மேலும் தேவைப்படும்போதெல்லாம் இணைந்த கூட்டம் நடத்தப்படலாம்.

– இந்தக் கூட்டத்தில் பங்குபெறும் அனைத்து உறுப்பினருக்கும் வாக்குரிமை உண்டு.

2.7. ஒவ்வொரு ஆண்டிற்கான நிதிநிலை ஆய்வு செய்த அறிக்கையை நிதிக் குழு பங்குப் பேரவையில் சமர்ப்பிக்க வேண்டும்.

III. விதிமுறைகள்

பிரிவு 1 : நிதிக் குழுவின் தேவை

1.1. திருச்சபைச் சட்டத் தொகுப்பு எண் : 537

"பங்கிற்குச் சொந்தமான உடைமைகளை நிர்வகிப்பதில் பங்குத் தந்தைக்கு உதவி செய்ய ஒவ்வொரு பங்கிலும் நிதிக்குழு ஒன்று

அமைக்கப்பட வேண்டும். இக்குழு, பொதுச்சட்டத்தாலும் மறைமாவட்ட ஆயர் இயற்றும் விதிகளாலும் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த விதிமுறைகளுக்கு ஏற்பத் தேர்ந்தெடுக்கப்பட்ட விசுவாசிகளைக் கொண்டுள்ளது இக்குழு".

1.2. திருச்சபைச் சட்டத் தொகுப்பு எண் : 532

சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் அனைத்திலும் பங்குத் தந்தையே பங்கின் பெயரால் சட்டத்திற்கேற்பச் செயல்படுவார். எண் 1281 முதல் 1288 வரை உள்ள திருச்சபைச் சட்டங்களின்படி பங்கிற்குச் சொந்தமான உடைமைகள் அனைத்தும் முறையாக நிர்வகிக்கப்படுவதை அவர் உறுதி செய்ய வேண்டும்.

பிரிவு 2 : நோக்கம்

2. பங்கு நிதியைப் பெருக்கி, அதை நிர்வகிப்பதில் பங்குத் தந்தைக்கு உதவி புரிவதே பங்கு நிதிக்குழுவின் தலையாய நோக்கமாகும்.

பிரிவு 3 : தகுதி (Competence)

3.1. பங்கு நிதிக்குழுவிற்குப் பொதுவாக ஆலோசனை வழங்கவே (Consultative voice) தகுதி உள்ளது. எனினும் திருச்சபையின் பொதுச்சட்டம் அல்லது மறைமாவட்ட ஆயரின் விதிமுறைகள் நிர்ணயிக்கும் சில குறிப்பிட்ட நடவடிக்கைகளில், பங்குத் தந்தை இக்குழுவின் ஒப்புதலின்றி (Consent) முறைப்படி செயல்பட இயலாது.

3.2. திருச்சபைச் சட்டம் வாக்குகளை (Votes or Voice) இரண்டு வகையாகப் பிரித்துள்ளது. ஒன்று தீர்மான வாக்கு (Deliberative), மற்றொன்று ஆலோசனை வாக்கு (Consultative). தீர்மான வாக்கிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சட்டப்படி செல்லாது (Invalid). நிதிக்குழுவின் ஒப்புதலைப் பெற வேண்டும் எனும்போது, பங்குக்குரு அக்குழுவின் ஒப்புதலைப் பெறாமல் அல்லது அக்குழுவின் தீர்மானத்திற்கெதிராகச் செயல்பட்டால் அச்செயல் சட்டப்படி செல்லாது. மாறாக, நிதிக்குழுவின் ஆலோசனையைப் பெறவேண்டும் எனும்போது, பங்குக்குரு அக்குழுவின் ஆலோசனையைக் கேட்கக் கடமைப்பட்டவராகிறார். ஆனால் அவ்வாலோசனையை அவர் கட்டாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்னும் நியதி இல்லை. இருப்பினும் மிகப் பெரிய, முக்கிய காரணங்கள் இருந்தாலன்றி அவர் நிதிக்குழுவின் ஒருமனதான (Unanimous) ஆலோசனைக்கு எதிராகச் செயல்படக் கூடாது.

பிரிவு 4: செயல் வரம்பு (Scope)

4.1. பங்குக்குச் சொந்தமான உடைமைகளைப் பராமரிப்பது, வருவாயை வசூல் செய்வது, பங்கின் வருவாயைத் திட்டமிட்டுப் பெருக்குவது போன்ற சாதாரண நிர்வாகத்தில் (ordinary administration) பங்குக்குரு இக்குழுவின் ஆலோசனையையும், ஒத்துழைப்பையும் பெறுவார்.

4.2. பங்குக்குரு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை விதிப்படி செயல்படுத்த நிதிக் குழுவின் ஆலோசனையைக் கண்டிப்பாகப் பெறக் கடமைப்பட்டிருக்கிறார்.

அ. பங்கு நிர்வாகத்தில் எதிர்வரும் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்டப் பட்டியலைத் தயார் செய்தல்.

ஆ. ரூபாய் 1,000/– முதல் ரூ. 5,000/- வரை உள்ள ஒற்றை வகைச் செலவை மேற்கொள்ளல். (இத்தொகை மறைமாவட்ட நிதிக்குழுவால் பண வீக்கத்திற்கு ஏற்ப மாற்றப்படும்.)

இ. ஆண்டிற்கான நிதிநிலை ஆய்வு செய்த அறிக்கையைத் தயாரித்து, அவ்வறிக்கையை மறைமாவட்ட ஆயரிடமும் பங்கு மேய்ப்புப் பணிப் பேரவை அல்லது பங்கு மக்களிடமும் சமர்ப்பித்தல். (காண்.தி.ச.எண். 1287 பிரிவு 2)

4.3. பங்குக்குரு கீழ்க்கண்டவற்றை விதிப்படி செயல்படுத்த நிதிக்குழுவின் ஒப்புதலைப் (Consent) பெற வேண்டும்.

அ. ரூ.5,000/– க்கு மிகையான ஒற்றை வகைச் செலவு ஏற்படும் முக்கிய பணிகளான பழுது பார்த்தல், மாற்றீடு செய்தல், கட்டடங்களை விரிவுபடுத்துதல், மற்றும் ஆலயங்கள், பள்ளிகள், சிறு வழிபாட்டுத்தலங்கள், கெபிகள், குருசடிகள் போன்றவற்றைப் புதிதாகக் கட்டுதல் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முன்பாகப் பங்குக்குரு நிதிக்குழுவின் ஒப்புதலைப் பெறுவதுடன், இத்திட்டங்களைப் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய மனு ஒன்று மறைமாவட்ட ஆயரின் அனுமதிக்காக அவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆ. பங்கின் அசையாச் சொத்துக்களை (immovable properties) விற்பதற்கோ, மாற்றுவதற்கோ, அன்பளிப்பாகக் கொடுப்பதற்கோ பங்குக்குரு நிதிக்குழுவின் ஒப்புதலைப் பெறுதல் வேண்டும். அவ்வாறு ஒப்புதல் பெற்ற பின்னரே மறைமாவட்ட ஆயர் தமது அனுமதியை வழங்குவார்.

இ. விருப்ப ஆவண வழிக்கொடை (bequest) அல்லது நன்கொடை (donation) போன்றவற்றைப் பெறவும், பெருந்தொகையைக் கடனாக வழங்கவும் அல்லது பெறவும் பங்குக்குரு நிதிக்குழுவின் ஒப்புதலைப் பெற வேண்டும். அதன் பின்னரே ஆயர் தம் அனுமதியை வழங்குவார்.

கீழ்க்கண்டவை பங்கு நிதிக்குழுவின் செயல்வரம்புக்கு உட்பட்டவை அல்ல:

4.4 குருக்களின் பராமரிப்புக்காக மறைமாவட்டத்தால் அளிக்கப்படும் உதவிப்பணம் (Congrua), அருட்சாதனங்கள் மற்றும் பல்வேறு புனிதச் சடங்குகளை நிறைவேற்றுவதற்கான காணிக்கை, சான்றிதழ்க் கட்டணங்கள் போன்றவற்றைத் திருமறையின் சட்டங்களின்படி மறைமாவட்ட ஆயரே நிர்ணயிப்பார்.

4.5. மறைமாவட்ட ஒழுங்குப்படி பங்கின் அன்றாட நிர்வாகம் பங்குத் தந்தையையே சாரும்.

பிரிவு 5 : உறுப்பினர்கள்

5.1. தகுதி

அ. பங்கில் ஓராண்டுக்குக் குறையாமல் குடியிருக்கும் 18 வயது நிரம்பிய கிறிஸ்துவ விசுவாசிகள்.

ஆ. கத்தோலிக்க நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பவராகவும், நம்பிக்கையும் நேர்மையும் உள்ளவராகவும், பங்கு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவராகவும் இருத்தல்.

இ. பொருளாதாரத்தைப் பற்றிய அறிவும் நிதி நிர்வாகத்தில் திறமையும் கொண்டவராக இருத்தல்.

ஈ. பங்குக் குருவுக்கு 4–ஆம் கால் வகையிலான இரத்த உறவினர் அல்லாதாராயிருத்தல்.

5.2. உறுப்பினர் எண்ணிக்கை

அ. பங்கு மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு இல்லாமல் பங்கின் பொருளாதாரம், நிதிநிர்வாகத்திற்கு ஏற்றவாறு குறைந்தது மூன்று, அதிக அளவு ஏழு உறுப்பினர்கள் நிதிக்குழுவில் இடம் பெறலாம்.

ஆ. குழுவினரின் மொத்த உறுப்பினர்களுள் தலைவர் தவிர மற்றவர்கள் பொது நிலையினராக இருத்தல் அவசியம்.

5.3. உறுப்பினர் தேர்வும் நியமனமும்

உறுப்பினர் :

அ. பணித் தகுதி அடிப்படையில்

1. பங்குத் தந்தை பணித் தகுதி அடிப்படையில் நிதிக்குழுவின் தலைவர் ஆவார்.

2. பங்கு மேய்ப்புப் பணிப் பேரவையின் செயலர் பணித் தகுதி அடிப்படையில் நிதிக்குழுவின் உறுப்பினராயிருப்பார்.

ஆ. – பங்கு நிதிக் குழுவின் மற்ற உறுப்பினர் பெயர்களைப் பங்கு மேய்ப்புப் பணிப் பேரவை முன்மொழிய வேண்டும்.

- நிதிக்குழு உறுப்பினர்களுள் குறைந்தது 2/3 பகுதியினர் பங்குப் பேரவையிலிருந்தும் மற்றவர்கள் உறுப்பினர் அல்லாதாரிடமிருந்தும் தெரிவு செய்யப்படுவர்.
- பங்குப் பேரவை இல்லையென்றால் பங்கு மக்களின் பொதுக்குழு, உறுப்பினர் பெயர்களை முன்மொழிய வேண்டும்.
- இந்நபர்களைப்பற்றிப் பங்குப் பேரவை செயற்குழு அல்லது பங்கு நிர்வாகக் குழுவுடன் பங்குத் தந்தை கலந்தாலோசித்து, உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, ஆயரின் ஒப்புதலுடன் பங்கு நிதிக் குழுவை நிறுவுவார்.

இ. நிதிக்குழுவின் உறுப்பினர்களை நியமிக்கும் ஒவ்வொரு முறையும் பங்குத் தந்தை ஆயரின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

5.4. உறுப்பினர் கால வரம்பு

அ. உறுப்பினர் பணிக்காலம் மூன்று ஆண்டுகள் மட்டுமே. மீண்டும் ஒருமுறை மட்டுமே அவர் தொடர்ந்து உறுப்பினராக இருக்கத் தகுதி பெறுவார். மூன்று ஆண்டு இடைவெளிக்குப் பின் அவர் மீண்டும் நியமிக்கப்படலாம்.

ஆ. உறுப்பினர் ஒருவர் இறக்கும்போது அல்லது பதவியை விரும்பித் துறக்கும்போது அல்லது பங்குக்குரு அவரைக் குழுவிலிருந்து நீக்கும்போது அவர் தமது உறுப்பினர் பதவியை இழப்பார்.

இ. பங்குப் பேரவை கலைக்கப்பட்டாலும் புதிய பங்குப் பேரவை உருவாக்கப்படக் கால தாமதமானாலும் நிதிக்குழு தொடர்ந்து செயலாற்றும்.

ஈ. நிதிக்குழுவின் கால வரம்பு முடிவதற்குள் ஏற்படும் காலியிடங்களை மேலே கூறப்பட்டுள்ள எண் 5.3 – இன்படி பங்குக்குரு நிரப்புவார்.

உ. பங்குக்குருவின்றிப் பங்கு காலியாக இருக்கும் பொழுது (Vacant Parish) நிதிக்குழு செயல்படாது.

பிரிவு 6: நிர்வாகிகள், பணிப்பொறுப்பாளர்

6.1. தலைவர்

தி.ச.எண். 532–இன்படி பங்குக் குருவே பங்கு நிதிக்குழுவின் தலைவராகச் செயல்படுவார்.

6.2. செயலர்

1. பங்கின் நிதிக்குழுவினர் அறுதிப் பெரும்பான்மை வாக்குடன் இக்குழுவின் செயலரைத் தேர்ந்தெடுப்பர்.
2. தலைவர் இசைவுடன் நிதிக்குழுவைக் கூட்டுவதும், கூட்ட அறிக்கைகளையும் தீர்மானங்களையும் எழுதிக் கூட்டங்களில்

வழங்குவதும், நிதிக்குழு சம்பந்தப்பட்ட எல்லா ஆவணங்களையும் காப்பதும், கடிதத் தொடர்புகளை வைத்துக் கொள்வதும் இவரது முக்கியப் பணியாகும்.

பிரிவு 7: கூட்டங்கள்

7.1. பங்கு நிதிக்குழு தேவைக்கு ஏற்ப எப்பொழுதும் கூடலாம். ஆயினும் ஆண்டிற்குக் குறைந்தது நான்கு கூட்டங்களாவது நடைபெற வேண்டும்.

7.2. பங்குக்குருவின் இசைவுடன் செயலர் குழுவைக் கூட்டுவார். சாதாரணமாகப் பங்குக்குருவே கூட்டத்திற்குத் தலைமை தாங்குவார். குழு கூடுவதற்குக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்பே கூட்ட நாள், நேரம், பொருள் பற்றிய அறிவிப்பு எழுத்து வடிவில் உறுப்பினருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பிரிவு 8 : வாக்கெடுப்பு

8.1. குழுவில் எடுக்கப்படும் முடிவுகள் அனைத்தும், வருகை தந்திருப்பவர்களின் அறுதிப் பெரும்பான்மை அடிப்படையில் தீர்மானிக்கப்படும். வாக்களிக்கும் உரிமை பங்குக் குருவுக்கு உண்டு. எனினும் வாக்களிப்பதை விவேகமற்றதாகக் கருதினால் அதை அவர் தவிர்க்கலாம்.

8.2. வாக்கெடுப்பில் சமநிலைச் சிக்கல் (tie) வரும்போது குழு ஒருமித்த முடிவிற்கு வரப் பங்குக்குரு வழிகோல வேண்டும். இது சாத்தியமில்லையெனில், அப்பிரச்சினையின் முடிவை ஒத்திவைக்கலாம். பின் இரு தரப்பினரின் விவாதங்களை ஆயரிடம் எடுத்துக் கூறி அவர் ஆலோசனையைப் பெற்று, அதன்படி செயல்படலாம்.

8.3. நிதிக்குழுவின் ஆலோசனை வாக்கு மட்டுமே பெற வேண்டிய நடவடிக்கைகளில் (காண் : மேலேயுள்ள எண் 4:1–2) பங்குக்குரு இந்தக் குழுவின் பெரும்பான்மை வாக்குத் தீர்மானங்களுக்கு எவ்விதத்திலும் கட்டுப்பட வேண்டியதில்லை. ஆயினும் தக்க, கனமான காரணங்களுக்காகவன்றி குழுவில் எடுக்கப்படும் ஒருமனதான தீர்மானங்களுக்கு எதிராகப் பங்குக்குரு செயல்படக் கூடாது.

8.4. நிதிக்குழுவின் ஒப்புதலைக் கட்டாயம் பெற வேண்டிய நடவடிக்கைகளில் (காண்: மேலேயுள்ள எண் 4:3) அதன் அறுதிப் பெரும்பான்மைத் தீர்மானங்களுக்குப் பங்குக்குரு முற்றிலும் கட்டுப்பட்டவராவார்.

பிரிவு 9 : நிதிக்குழுவின் செயல்பாடுகள் தணிக்கை

மறைமாவட்டத்தின் பங்குகளிலுள்ள நிதிக்குழுக்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதும் முறைப்படுத்துவதும் சாதாரணமாக மறைமாவட்ட நிதிக்குழுவின் பொறுப்பாகும். ஆயினும் பங்கு நிதிக்குழுக்களின் செயல்பாடுகளைத் தணிக்கை செய்து முறைப்படுத்த மறைமாவட்ட அளவிலோ மறைவட்ட அளவிலோ ஆயர் தணிக்கைக்குழு ஒன்றை ஏற்படுத்தி இப்பணியைச் செய்யலாம்.

பிரிவு 10: மேல் முறையீடு

மேலே வரையறுக்கப்பட்ட நிதிக்குழுவின் அமைப்பிலும் நடவடிக்கைகளிலும் எழும் பிரச்சினைகளுக்குப் பங்குத் தந்தை ஆயரிடம் மேல் முறையீடு (hierarchical recourse) செய்யலாம். இவற்றில் ஆயர் தனிப்பட்ட விதத்திலோ, தேவைப்படின் மறைமாவட்ட நிதி நிர்வாகக் குழுவைக் கலந்தாலோசித்தோ எடுக்கும் முடிவே இறுதியானது.

பிரிவு 11 : ஒப்புதல்

மறைமாவட்ட ஆயரின் ஆணை:

ஆயர் கீழ்க்கண்டவாறு நிதிக்குழுவைப் பிரகடனம் செய்யலாம்:

மறைமாவட்ட நிதிக்குழுவைக் கலந்தாலோசித்தபின் மேலே கண்ட பங்கு நிதிக் குழுவின் விதிமுறைகளை இவ்வாணை மூலம் அங்கீகரித்துப் பிரகடனம் செய்கிறேன். அனைவரும் இதை ஏற்றுக் கடைப்பிடிக்க அறிக்கை விடுக்கிறேன்.

இவ்வாணை எட்டிய ஓராண்டிற்குள் எல்லாப் பங்குத் தளங்களிலும் இவ்விதிமுறைகளின்படி நிதிக்குழுக்களை அமைத்திட வேண்டுமென பங்குத் தந்தையர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாணை .... (ஊர்)ல்
.... ஆம் ஆண்டு ....
திங்கள் .... நாள் பிரகடனப்படுத்தப்படுகிறது.

மறைமாவட்டச் செயலகப் பொறுப்பாளர். மறைமாவட்ட ஆயர்.

நிதி நிர்வாகம் பற்றிய திருச்சபைச் சட்டங்கள் – சில பகுதிகள்

(பொதுவாகச் சொல்லப்பட்ட இச்சட்டங்கள் பங்கிற்கும் பொருந்தும்.)

பங்குத் தந்தை, பங்கின் சொத்துக்களையும் பொருட்களையும் திருச்சபைச் சட்டம் எண் 1281 – 1288க்கேற்ப நிர்வகிக்க வேண்டும்.

எண் 1281 : நிதி நிர்வாகம்

1. திருமறைச்சட்டங்களுக்கு முரண்பாடற்ற வகையில், சாதாரண நிதி நிர்வாக எல்லைகளைத் தாண்டிச் செயல்படத் தேவையான உத்தரவினை மறைமாவட்ட ஆயரிடமிருந்து பெறத் தவறினால் நிர்வாகிகள் நடவடிக்கை செல்லுபடியாகாது.

2. சாதாரணப் பங்கு நிர்வாகத்தின் எல்லைகளைத் தாண்டிய நடவடிக்கைகள் எவை என்பதைச் சட்டங்கள் தாம் வரையறுக்க வேண்டும். சட்டங்கள் வெளிப்படையாகக் கூறாதபோது, மறைமாவட்ட ஆயர் நிதிக்குழுவைக் கலந்தாலோசித்து, பணியாற்றும் ஆட்களின் நடவடிக்கைகளை வரையறுத்துக் கட்டளை பிறப்பிக்க வேண்டும்.

3. பொது நலன்களுக்காக அல்லாமல் சட்டப்பூர்வமான பொறுப்புடைய ஒருவர் நிர்வாகியின் செல்லத்தகாத செயல்களுக்குப் பொறுப்பாளியாக முடியாது. எனினும், இழப்பிற்குக் காரணமான நிர்வாகிமேல் நடவடிக்கை எடுக்க உரிமை இருப்பினும், சட்டப்பூர்வமில்லாத ஆனால் செல்லத்தக்க செயல்களாக இருப்பின் சட்டபூர்வமான பொறுப்புடையவரே அதற்குப் பொறுப்பாளியாகிறார்.

எண் 1282 : பொறுப்புணர்வு

திருமறைச் சொத்துக்களின் நிர்வாகத்தில் முறைப்படி பங்கு பெறுகின்ற குருக்கள், இல்லற விசுவாசிகள் அனைவரும் திருச்சபையின் பெயராலும் திருச்சட்டத்தின் பெயராலும் தங்கள் கடமைகளை ஆற்ற வேண்டும்.

எண் 1283 : பொறுப்பேற்கும் முறை

நிர்வாகிகள் பொறுப்பேற்கும் முன்பு பின்வரும் நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்

1. ஆயரின் அல்லது அவரது பிரதிநிதியின் முன்னிலையில் தங்களது கடமையை முறையாகவும், உண்மையாகவும் செய்வதாக உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

2. பங்கிற்குரிய அசையும் சொத்துக்கள், அசையாச் சொத்துக்கள், கலை, பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த மதிப்புமிக்க பொருட்கள் ஆகியவற்றின் இருப்புப் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டு, அவர்களால்

கையொப்பமிடப்பட்டு அது சரியாக உள்ளதென்று முறையான அதிகாரப் பொறுப்புடையவரால் சான்றொப்பம் வழங்கப்பட வேண்டும்.

3. இத்தகைய சொத்து இருப்புப் பதிவேட்டின் நகல் ஒன்று பங்கு நிர்வாக அலுவலகத்திலும், மற்றொன்று மறைமாவட்ட நிர்வாக அலுவலகத்திலும் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். சொத்தின் இருப்பில் மாற்றம் இருந்தால் இருப்புப் பதிவேடுகளில் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

எண் 1284 : நிதிக்குழுவின் கடமைகள்

1. நிதி நிர்வாகப் பொறுப்பாளர்கள் அக்கறையுள்ள வீட்டுத் தலைவரைப்போல் கடமைகளைச் செய்ய வேண்டும்.

2. ஆகவே அவர்கள் கட்டாயமாகப் பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்:

அ. தங்களது பொறுப்பிலுள்ள பொருட்கள் அழிந்து போகாதபடி அல்லது இழப்பிற்குட்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். தேவைப்பட்டால், காப்பீட்டு நிறுவனத்துடன் இழப்பீட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

ஆ. பங்கிற்குரிய சொத்துக்கள் நாட்டின் சட்டப்படி பராமரிக்கப்பட வேண்டும்.

இ. திருமறைச் சட்டப்படியும் நாட்டின் சட்டமுறைப்படியும் அந்தச் சொத்துக்களை நன்கொடையாக வழங்கியவர்கள் அல்லது சட்ட பூர்வமான அதிகாரிகள் விருப்பப்படியும் அந்தந்தச் சொத்துக்களை நிர்வகித்துப் பராமரிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

ஈ. சொத்துக்களிலிருந்து வரும் வருவாய் அல்லது உற்பத்திப் பொருட்களை, அறக்கட்டளைகளை ஏற்படுத்தியவர்களின் விருப்பப்படி அல்லது நியாயமான நாட்டுச் சட்ட முறைப்படி திருச்சபையின் சட்ட திட்டங்களுக்கு ஏற்பப் பராமரித்துப் பயன்படுத்த வேண்டும்.

உ. கடனோ அல்லது சொத்தின்மீது அடமானமோ இருந்தால் உரிய காலத்தில் வட்டியைச் செலுத்துவதோடு கூடிய விரைவில் அசலையும் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

ஊ. செலவு செய்தது போக உபரியாக உள்ள பணத்தை ஆயரின் ஒப்புதலுடன் சட்டப் பூர்வமான பொறுப்புடையவர், (பங்குத்) தேவைக்காகப் பயனீட்டு வகையில் முதலீடு செய்து பணத்தைப் பயன்படுத்த வேண்டும்.

எ. வரவு செலவிற்குச் சரியான கணக்குப் பதிவேடுகளை எழுதி வைத்திருக்க வேண்டும்.

ஏ. ஆண்டிறுதியில் வரவு செலவுக் கணக்கு அறிக்கையைத் தயார் செய்ய வேண்டும்.

ஐ. கோவில் அல்லது நிறுவனங்களுக்கு உரிய சொத்துக்களின் உரிமை பற்றிய உண்மைப் பதிவேடுகள் பொருத்தமான ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட வேண்டும். இவற்றின் உண்மை நகல்கள் மறைமாவட்ட ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட வேண்டும்.

3. நிதி நிர்வாகப் பொறுப்பாளர்கள் ஒவ்வோர் ஆண்டும், ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் பரிந்துரைக்கப் படுகிறது. இதைக் கட்டாயமாக்குவதும் எப்படிவத்தில் அதைத் தயாரிப்பது என்பதும் பற்றிய விவரங்கள் ஆயரின் விருப்பத்திற்கு விடப்படுகிறது.

எண் 1285 : செலவிடும் முறை

சாதாரண நிர்வாக எல்லைக்குட்பட்டு, நிர்வாகிகள் நிரந்தர வருமானத்தைச் சாராத அசையும் சொத்துக்களின் வருவாயிலிருந்து அருள்வாழ்வைச் சார்ந்தவற்றிற்கும் அறப் பணிகளுக்கும் செலவு செய்யலாம்.

எண் 1286 : சம்பள நிர்ணயம்

1. தொழிலாளருடன் ஒப்பந்தம் செய்யும்போது, திருமறைப் போதனைகளுக்கேற்ப, தொழிலாளரின் சமூக வாழ்வுடன் தொடர்புடைய நாட்டின் சட்டங்களை அனுசரிக்க வேண்டும்.

2. தங்களிடம் பணியாற்றுபவர்களுக்கு நியாயமான, கௌரவமான, அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கும் வாழ்க்கைக்குப் போதுமான அளவு சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

எண் 1287 : யாருக்குக் கணக்குக் காட்ட வேண்டும்?

1. மறைமாவட்ட ஆயரின் ஆளுகைக்குட்பட்ட சொத்துக்களின் நிர்வாகக் கணக்குகளை ஆண்டிற்கொருமுறை குருக்கள், பொதுநிலையினராகிய நிர்வாகிகள், மறைமாவட்ட ஆயருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அவை நிதி நிர்வாகக் குழுவின் தணிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும். இதற்கு மாறான நடைமுறை ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

2. மக்கள் திருச்சபைக்கு நன்கொடையாகக் கொடுத்த சொத்துக்களின் வரவு செலவுக் கணக்குகளை, நிதி நிர்வாகப் பொறுப்பாளர்கள் மறைமாவட்ட நடைமுறை விதிமுறைப்படி, மக்களுக்குக் கொடுக்க வேண்டும்.

எண் 1288 : செய்யக் கூடாதவை

நிர்வாகப் பொறுப்பாளர்கள் தங்கள் ஆயரின் முன் அனுமதியை எழுத்து வடிவத்தில் பெறாமல் சட்டபூர்வமான ஆள் பெயரால் நீதிமன்றங்களில் வழக்குத் தொடருதலோ நடத்துதலோ முடியாது.

மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவை :

"ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் மேய்ப்புப் பணிச் சூழலுக்கேற்றவாறு, ஒரு மேய்ப்புப் பணிப் பேரவை ஏற்படுத்தப்பட வேண்டும். மறைமாவட்ட ஆயருடைய அதிகாரத்திற்கு உட்பட்டு, மறைமாவட்டத்தின் அனைத்து மேய்ப்புப் பணி சார்ந்த காரியங்களை ஆராய்ந்து, சீர்தூக்கி அவை பற்றிச் செயல்முறைக்கேற்ற முடிவுகளை வழங்குவது இந்த மேய்ப்புப் பணிப் பேரவையின் பணியாகும்".

(திருச்சபைச் சட்டத் தொகுப்பு எண். 511)

பங்கு மேய்ப்புப் பணிப் பேரவை :

"மறைமாவட்ட ஆயர், குருக்கள் மன்றத்தைக் கலந்தாலோசித்த பின், ஏற்ற சூழ்நிலை இருப்பதாகக் கருதினால் ஒவ்வொரு பங்கிலும் ஒரு பங்கு மேய்ப்புப் பணிப் பேரவை அமைத்திட வேண்டும். பங்குத் தந்தை தலைமை வகிக்கின்ற இப்பேரவையில் கிறிஸ்தவ விசுவாசிகள் பங்குத் தளத்தில் மேய்ப்புப் பணிப் பொறுப்பைத் தங்கள் பணித் தகுதியில் ஆற்றுபவர்களோடு சேர்ந்து, மேய்ப்புப் பணியை வளமுறச் செய்வதற்குத் தங்களின் உதவியை நல்குவர்".

(திருச்சபைச் சட்டத் தொகுப்பு எண். 536)

பங்கு நிதிக் குழு :

"பங்கிற்குச் சொந்தமான உடைமைகளை நிர்வகிப்பதில் பங்குத் தந்தைக்கு உதவி செய்ய ஒவ்வொரு பங்கிலும் நிதிக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இக்குழு பொதுச் சட்டத்தாலும் மறைமாவட்ட ஆயர் இயற்றும் விதிகளாலும் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த விதிமுறைகளுக்கு ஏற்பத் தேர்ந்தெடுக்கப்பட்ட விசுவாசிகளைக் கொண்டுள்ளது இக்குழு".

(திருச்சபைச் சட்டத் தொகுப்பு எண். 537)

Typeset and Printed at SUSIN DISK TOP GRAPHICS Trichy - 1 ✆ 462177